

கணையாழியும் சூளாமணியும்

21. கீழ்வானம் தெளிவுறும்

பி.ஸ்ரீ

அனுமனின் காரியப் பேச்சை மறுத்துரைக்கும் சீதை பல காரணங்கள் கூறிய பின்பு கடைசியாக, 'நீ செய்ய நினைத்த அந்தக் காரியம் — அதாவது தன்னை அனுமன் தோள் மீது எடுத்துக் கொண்டு செல்வதாகிய காரியம்—செய்யத் தக்க காரியமன்று' என்கிறாள். எனவே, அனுமன் ராமனிடம் திரும்பிப் போவதே அவன் இப்போது செய்ய வேண்டிய காரியம் என்று கூறி முடிக்கிறாள்.

இரண்டு மாணிக்கங்கள்

சீதை தன் அபிப்பிராயத்தை இவ்வளவு கண்டிப்பாகக் கூறிய போதிலும் செவிக்கினிய செஞ்சொற்களால் வினயமாகவும் உசிதமாகவும் கூறி முடித்தாள் என்பதை வற்புறுத்தவே, கவிஞன் சீதையைப் 'பூவை' (கிளி) என்று குறிப்பிடுகிறான்.

> தூய மென்சொல்
> இனையன சொல்லுவாள்

என்ற அந்தப் பீடிகையின் நினைவுக் குறியாக.

> பெரிய பேதை
> மைச்
> சின்மதிப்
> பெண்மையால்

என்ற அந்தப் 'பேதைமை'யையும் நினைப்பூட்டுகிறது 'பூவை.'



மிதிலைப் பண்பாடும் கோசலப் பண்பாடும் கலந்து பரிமளிக்கின்றன இப் 'பூவை' வாக்கிலே என்பதற்கு,

> 'ஆகலான், அது
> காரியம் அன்(று), ஐய!
> வேத நாயகன்
> பால்இனி மீண்டனை
> போதல் காரியம்!'
> என்றனள் பூவை; அக்
> கோதி லானும்
> இனையன கூறினன்.

[ஆகலான் - ஆதலால். ஐய - ஐயனே வேதநாயகன் பால் - ராமனிடத்தில். மீண்டனை போதல்-மீண்டு போவது. பூவை-கிளி போன்ற சீதை. கோது இலானும் - குற்றமில்லாத அனுமனும். இனையன கூறினன் - இவற்றைச் சொல்லலானான்.]

என்ற இறுதிச் செய்யுளும் சான்று.

'பூவை'யின் கண்டனத்திற்கு உரியவனாகி விட்ட போதிலும், அனுமனைக் 'கோதிலான்' என்றே கவி பூவைக்கு அருகே நிறுத்திக் காட்டும் சாதுரியம் உய்த்துணரத் தக்கது.

> போதல் காரியம்
> என்றனள்
> பூவை; அக்
> கோதி லானும்

என்ற வந்துவிழும் அந்தச் 'சொற்கலை'யைப் பாருங்கள்.

இப்படிக் கவிக் கூற்ருகப் பாராட்டப் பெறும் கோதிலாளை நோக்கிச் சீதை,

காண்டி ஐய ! நின்
மெய்யுணர் கண்களால்

என்று பாராட்டிக் கூறியதையும் நினைப் பூட்டிக் கொள்ளலாம்.

அனுமனுடைய ஆலோசனைக்குத் தோல்விதான். எனினும் குதூகலம் குறைவதற்கு மாருக அதிகப்படுகிறது. அந்தக் குதூகலத்திலே அனுமன் வாக்காக வருகின்றன இரண்டு பாடல்கள்.

இரண்டு கவி மாணிக்கங்கள் என்று போற்றத் தக்கவை. சீதையும் அனுமனும் இரண்டு ஜீவ மாணிக்கங்களாகத் தானே இங்கு வெளிப்படுகின்ருர்?

அவற்றை உற்று நோக்குவதற்கு முன் வால்மீகியின் கதைப் போக்கைத் தெளிவாகத் தெரிந்து உள்ளத்திற் கொள்ள வேண்டும்.

வால்மீகியில் அனுமனும் சீதையும்

'ராமன் இங்கே வந்து ராவணனைச் சுற்றத்தாருடன் வதஞ் செய்து என்னை எல்லோருமறிய அழைத்துப் போவது அவனுக்கு அழகு' என்ருள் சீதை. 'அவனுடைய குலத்திற்கும் வீரியத்திற்கும் பராக்கிரமத்திற்கும் புகழுக்கும், என்னிடம் வைத்த பிரீதிக்கும் அழகு' என்று வால்மீகியின் கவிதையுள்ளத்தை ஸ்ரீ ஸி.ஆர். ஸ்ரீநிவாஸையங்கார் விளக்கிக் காட்டுகிருர்.



பிறகு சீதை ராமனுடைய போர் வீரத்தைப் புகழ்ந்து, விராதன் கரன் முதலான அரக்கர்கள் வதமானபோது நேரில் பார்த்திருப்பதாகச் சொன்ஞள். தன்னை மணஞ் செய்வதற்கு முன் தாடகை மாரீசன் முதலானவர்களைக் கொன்ற வீர பராக்கிரமத்தையும் கேட்டிருக்கிருளல்லவா?

மேலும், கவந்தனும் வாலியும் வதஞ் செய்யப்பட்டதை அனுமனே சொல்லி யிருக்கிருனல்லவா? ராம லட்சுமணர்களின் வீரச் சேர்த்தியையும் நினைத்துப் பார்த்தாள். தீயும் காற்றும் சேர்ந்தது போல் இரண்டு சகோதரர்களும் யுத்த அரங்கத்தில் சேர்ந்து நின்ருல் யாரே எதிர்த்து நிற்க முடியும்? இவ்வாறு பேசும் சீதை ராமன் பாணங்களைப் பொழிகின்ற அந்தத் தோற்றத்தையும் நினைத்துப் பார்த்தாள்.

பிரளய காலத்திலே சூரிய பகவான் உலகங்களையெல்லாம் அழித்து விட ஆயிரத்தெட்டுக் கண்களையும் திறந்து பார்க்கப் போகிருனும். அந்த ஊழிக் காலக் கதிரோன் போல் பாணங்கள் ஜோதியாகக் கதிர்களாகப் பொழிய ரகுவீரன் போர்க்களத்திலே சலியாது நின்று போராடப் போகிருனும், லட்சுமணனுடன். அந்த ரகுவீரனை எந்தச் சத்துரு அச்சமின்றி நோக்கி வதஞ் செய்யப்படாது தப்பிப் போக முடியும்?

இப்படி யெல்லாம் பேசிய சீதை, 'ஆகையால் வானர சிரேஷ்டனே! ராம லட்சுமணரைச் சேனைகள் தொடர விரைவில் இங்கே அழைத்து வா' என்ருள். அவனையே நினைத்துச் சோகத்தால் நொந்து கிடக்கும் தன்னை மகிழ்விக்கும் உபாயம் அதுவே என்று கூறி முடித்தாள்.

அது கேட்ட வானர சிரேஷ்டன் மிக்க மகிழ்ச்சி யடைந்தான். சீதை சொன்ன வார்த்தைகளைப் பாராட்டினுன். தன் முதுகில் ஏறிப் பெருங்கடலைத் தாண்டுவது பெண்ணுகியசீதைக்கு இயலாத காரியம் என்றும் ஒப்புக் கொண்டான்.

ராமனைத் தவிர வேறு புருஷனைத் தொட மாட்டேனென்று சீதை சொன்ன அந்தச் சொல்



அன்பினால் நெகிழ்ந்த உள்ளமும் ஆலோசித்து விண்ணட்பித்துக் கொண்டது தான் என்றான். கள்ளங்கவடில்லாத உள்ளத்திலே தோன்றிய ஆலோசனை என்பது குறிப்பு.

ராம பத்தினிக்கே தகும் என்றும் கொண்டாடினான். சீதையைத் தவிர வேறு ஒருவரும் இப்படிப்பட்ட வார்த்தை சொல்ல மாட்டார் என்றும் சொல்லிப் பாராட்டினான்.

பிரகு சீதையின் விருத்தாந்தங்களையும் வார்த்தைகளையும் ஒன்று விடாமல் ராமனிடம் தெரிவிக்கப் போவதாகக் கூறினான். அப்பால், தான் தோளில் தூக்கிப் போவதாகச் சொன்ன அந்த ஆலோசனைக்கும் சமாதானமாகச் சில வார்த்தைகள் சொன்னான்.

ராமனுக்குப் பிரியமான காரியத்தைச் செய்யவேண்டும் என்ற இச்சையும், தன்னுடைய எதார்த்த பராக்கிரமத்திலிருந்தும் பிறந்தது அந்த ஆலோசனை யென்றும் சொன்னான். கடலைத் தாண்டுவதே கஷ்டம்; அரக்கர் காக்கும் இலங்கையில் பிரவேசிப்பது அதிலும் கஷ்டம். இத்தகைய செயற்கருஞ் செயல்களைச் செய்த தனக்குத் தான் சொன்னபடி செய்யும் சக்தி உண்டு என்பதையும் வற்புறுத்தினான்.

ராமனிடத்தில் தனக்குள்ள நட்புக் காதலாலும், சீதையிடமுள்ள பக்தியாலும், இருவரையும் இப்பொழுதே சேர்த்து வைக்க வேண்டுமென்ற அளவற்ற ஆசையாலும் தனக்கு அந்த

ஆலோசனை தோன்றிய தென்பதை மீண்டும் வற்புறுத்தி, 'இல்லாவிட்டால் இட்படிச் சொல்வேனா?' என்றான்.

'ராமனிருக்த மிடத்திற்குத் தன் னுடன் வர இஷ்டப்படா விட்டால், நான் தங்களைப் பார்த்தேனென்று அவர் நம்புமாறு அடையாளம் தந்தருள வேணும்' என்று கூறி முடித்தான்.

சீதை முதலாவது அடையாளமாகக் 'காகாசுர விருத்தாந்தம்' சொன்னாள். கண்ணீரோடு கலந்து வரும் சொற்க ளைக் கொண்டு அந்த விருத்தாந்தத்தை விவரித்தாள்.

இந்தக் காகாசுர விருத்தாந்தம் வால்மீ கத்தில் விவரிக்கப்படுகிறது. இதைக் கூறிய சீதை, 'எனக்காக ஒரு காக் கையின் மேல் பிரம்மாஸ்திரப் பிர யோகம் செய்தவர் ஓர் அரக்கனைப் பொறுத்திருப்பதற்குக் காரணம் ஏதோ? பிறர் துக்கம் காணச் சகிக்க மாட்டே னென்றவர், அந்த வார்த் தையை நடத்தையில் காட்டி நான் படும் துயரத்தைத் தீர்க்கக் கூடாதா?' என்றெல்லாம் பேசத் தொடங்கினாள். இந்த விவரத்தைப் பின்பு பார்த்துக் கொள்வோம்.

இப்படிச் சீதை கண்ணீர் பெருகப் பிரலாபித்தது கேட்டு அனுமன் மனங் கலங்கிய போதிலும், சமாதான வார்த்தை சொன்னான். அதற்குச் சீதை சோகத்துடனேயே பதில் சொன்னாள். சொல்லி விட்டுச் சூடாமணியை அடை யாளமாகக் கொடுத்தாள்.

இப்படிப் போகிறது வால்மீகியின் கதைப் போக்கு. நடந்ததை நடந்த படியே சொல்வது போல் அமைந்திருக் கிறது. வால்மீகியின் கதை சொல்லும் கலை. இனி நாம் கம்ப ராமாயணத் திலே விட்ட இடத்திற்குத் திரும்பு வோம்.

கம்பனின் 'மெய்யுணர்' கண்கள்

தன் காரியப் பேச்சுக்குத் தோல்வி ஏற்பட்டது குறித்து அனுமனுக்குக் கவலையில்லை; குதூகலம் தான். சீதை தைரியத்தைக் கைவிட மாட்டாள் என்ற நம்பிக்கையும் ஏற்படுகிறது:

'நன்று நன்(று), இவ்
உலகுடை நாயகன்
தன்துணைப்பெருந்
தேவி தவத்தொழில்!'
என்று சிந்தை
களித்துஉவந்(து) ஏத்தினான்,
நின்ற சங்கை
இடரொடு நீங்கினான்.

[உலகுடை நாயகன் – இவ்வுலக மெல் லாம் இவனுக்கே உடைமை என்று சொல்லும்படி உயர்ந்து விளங்கும் ராமபிரான். துணை – இல்லறம் நடத்து வதற்கு ஏற்ற துணையாக அமைந்த- பெருந்தேவி – பட்டமகிஷி சீதை. நின்ற – உள்ளத்தி லிருந்த. சங்கை – சந்தேகம். இடர் – துன்பம்.]

இனி, விடை பெற்றுக் கொள்ள வேண்டியது தான் என்று தீர்மானிக்கி றான்;

'இருளும் ஞாலம்
இராவணனால்! இது
தெருளும், நீ இனிச்
சில்பகல் தங்குறின்!
மருளும் மன்னவற்(கு)
யான்சொலும் வாசகம்
அருளுவாய்!' என்(று)
அடியின் இறைஞ்சினான்.

[ஞாலம் – உலகம். தெருளும் – தெளிந்து விளங்கும்: சில் பகல் – சில தினங்கள். தங்குறின்–தங்கியிருந்தால். மருளும் – மயங்கிக் கொண்டிருக்கிற.]


ஆனால் உலக இருள் தியாகமில்லாமல் நீங்கிவிடும் என்று அனுமன் நம்ப வில்லை. 'பெருந்தேவியின் தவத் தொழில்' என்று சீதையின் தியாக நிலையைக் குறிப்பிட்டானல்லவா? அந் தத் தவத் தொழிலில், அதாவது இந்தச் சிறையில் இன்னும் சில தினங்கள் இருந்து துன்பம் அனுபவிக்க வேண்டி யதுதான். அப்போது தான் உலகத்தை மூடியிருக்கும் ராவண இருள் நீங்கி உலக நலமாகிய ஞாயிறு உதயஞ் செய்யும்' என்கிறான்.

இனி ராமனுக்கு ஆறுதல் அளிக்க வேண்டியதுதான் பாக்கி என்று நினைக் கிறான். 'மன்னவனுக்கு நான் என்ன சொல்ல வேண்டும்?' என்று கேட் கிறான்.

கேட்டது தான் தாமதம்; 'கிணறு வெட்டப் பூதங்கள் புறப்படுவது போலப் புறப்படுகின்றன, சீதை யுள் ளத்திலே புதைந்து கிடந்த நினைவுகள், ஐயங்கள், சோகங்கள், கணவன்மீது கோபதாபங்களோடு பரிவு பாசங்கள் எல்லாம்.

சுந்தர ராமாயணம்

கணையாழியும் சூளாமணியும்



22. மன்னனும் வருவானே?

பி.ஸ்ரீ

'வேறு ஒருவரோடாவது அனுபவிக்கக் கூடியது தான் ஆனந்தம்: தான் ஒருவனே தனிமையில் பொறுத்துக் கொள்வது தான் சோகம்' என்றார் ஓர் அறிஞர்.

அழகே உண்மை: உண்மையே அழகு என்று கூறுவதுண்டல்லவா? — சோகமே உண்மை என்றார் சிறை புகுந்து துன்புற்ற ஓர் அறிஞர்.

சிறைபுகுந்து உண்மைகண்டு விடுதலை கண்டு நாடும் உலகமும் நலம் பெறத் தவங்கிடந்த காந்தியடிகளை அறியாதார் யார்? உலக ரட்சகர்களில் ஒருவரான கிறிஸ்துமூர்த்தியும் சோகத்தால் உண்மையைக் கண்டு காட்டிய புருஷோத்தமரல்லவா?

'சோகத்தால் ஆகிய நம்பி' (The man of sorrows) என்பர் கிறிஸ்து பெருமானை. 'சிறையின் எய்திய செல்வி' யாகிய சீதா பிராட்டியைச் 'சோகத்தாளாய நங்கை' யெனக் காட்டுகிறது கம்பராமாயணம் — சுந்தர காண்டம்.

சிறையும் சோகமும் சீதையின் தவமாக, உலகத்திற்கே விடிவு ஏற்படும் என்பது அனுமனின் குதூகல வாசகம். இந்தப் பெருங் கொள்கை அந்தப் பெருந்தேவிக்கு ஆறுதல் அளிக்கும் என்று நம்புகிறான் அனுமன். இனி 'மருளும் மன்னவ'னுக்கு ஆறுதல் — செய்தியைத் தான் அனுமனுள்ளம் எதிர்பார்க்கிறது.

பிரமசாரிக்குத் தெரியாத பெண்மை யுள்ளம்

ஆனால் சீதையின் நிலை என்ன? ஆனந்தத்தின் உச்சியில் இருந்தவள் தான். ஆனந்தப் பேரலையின் வெண்ணுரைச் சிகரத்திலே வீரலட்சுமியாகக் காணப்பட்டவள் தான். ஆனால் அந்த மலைபோன்ற அலை யுச்சியி லிருந்து நழுவி அவநம்பிக்கை யென்ற பாதாள மடுவுக்கே வந்து விடுகின்றாள்.


இதை அனுமன் அறிந்து கொள்ளவில்லை. எப்படி முடியும்? சொல்லின் செல்வன் அறிவின் செல்வனும் கூட; எனினும் இந்தப் பிரமசாரியால் இந்தப் பெண்மை யுள்ளத்தை (சீதா பிராட்டியும் பெண் தானே) அறிந்து கொள்ள இயல வில்லை.

'தியாகத்தின் தத்துவ சிகரத்தைக் குறித்துப் பேசி விட்டானே, வறட்டுத் துறவி போலே! "மருளும் மன்னவன்" என்று அந்த மன்னவனுக்குத் தானே பரிந்து பேசுகிறான்? அவன் துன்பத்தைத் தானே பெரிதாகக் கருதிவிட்டான்? நம்முடைய அபாயகரமான நிலையை நேரில் கண்டும் உள்ளபடி அறிந்து கொள்ளத் தவறி விட்டான்!' என்பது இப்போது சீதையின் மனநிலை.

இந்த மன நிலையிலிருந்து புறப்படுகின்றது சீதையின் மறுமொழி. அனுமன் எதிர்பார்த்ததற்கு மாறாகவே அவள் பதில் சொல்லத் தொடங்குகிறாள். இந்தத் தொடக்கமே அனுமனைத் திடுக்கிடச் செய்திருக்கவேண்டும்:

இன்னும் ஈண்டொரு
திங்கள் இருப்பல்யான்;

நின்னை நோக்கிப்
பகர்ந்தது, நீதியோய்!



பின்னை ஆவி
  பிடிக்கின்றி
  லேன்! அந்த
மன்னன் ஆணை!
  இதனை மனக்
  கொள் நீ.

[திங்கள்–மாதம். பிடிக்கின்றிலேன் –பிடித்து வைக்க மாட்டேன்.]

'மருளும் மன்னவ'னுக்கு ஆறுதல் - வாசகம் கேட்ட அனுமனை நோக்கி, 'அந்த மன்னன் ஆணை!' என்று ஆணையிட்டுச் சீதை பதில் சொல்வதைக் கேளுங்கள். உள்ளுக்குள்ளே குமுறிக் குமைந்து கொண்டிருக்கும் வருத்தம், கசப்பு, கோபம், சோர்வு முதலியவற்றை எவ்வளவு லேசாகக் காட்டி விடுகிறது, 'அந்த மன்னன்' என்று சீதை குறிப்பிடும்போது!

உயிர் பறந்து போகத்தான் பார்க்கிறதாம்; எவ்வளவோ சிரமப்பட்டுத்தான் அதை இந்தக் கூட்டில் எப்படியோ பிடித்து வைத்திருக்கிறாளாம். இந்த அற்புதத்தை இப்படியே நீண்ட காலம் செய்து கொண்டிருக்க இயலாது; இன்னும் ஒரு மாத காலம்தான் முடியும் என்கிறாள்.

இப்படி அலுத்துச் சலித்து வெறுத்துப் பேசும்போதே ராமனுடைய திவ்ய மங்கள ரூப சித்திரம் மனக் கண் முன் வந்து விடுகிறது. உடனே எவ்வளவு நிஷ்டூரமாகப் பேசுகிறாள், அனுமனை நோக்கி! ஆ, எவ்வளவு கொடுமையாக:

ஆரம் தாழ்திரு
  மார்பற்(கு) அமைந்ததோர்
தாரம் தான்அல—
  ளேனும், தயாஎனும்
ஈரம் தான்அகத்(து)
  இல்லைஎன் றாலும், தன்
வீரம் காத்தலை
  வேண்டென்று வேண்டுவாய்!

[ஆரம் தாழ் – பூமாலைகள் தொங்குகின்ற. திரு மார்பற்கு-அழகிய மார்பையுடைய ராமனுக்கு. அமைந்ததோர் தாரம் – ஏற்ற தகுதியுள்ள ஒரு மனைவி. அலள் எனும் – சீதை அல்லள் என்றாலும்.]

'சீதை அவனுக்கேற்ற தாரம் அல்லள்' என்று பேசுகிறாள், ஒரு குழந்தை தன்னைக் குறிப்பிட்டுப்பேசுவது போல! இவளுடைய கோபமும் நிஷ்டூரமும் கூடக் கள்ளங் கவடற்ற குழந்தை யுள்ளத்தைத்தான் நினைப்பூட்டுகின்றன.

அந்த அழகான மார்புக்குள் ஈரம்தான் இல்லையாம்! சரி; வீரமாவது இருக்க வேண்டுமல்லவா? திடீரென்று இளையவனின் நினைவும் வருகிறது.

லட்சுமணனுக்கு ஆறுதல்-செய்தி

அந்த நாளில் தான் அவனை நிந்தித்துப் பேசியது இன்னும் உள்ளத்தில் உறுத்திக் கொண்டிருக்கிறது. ராமனுக்கு ஆறுதல் சொல்ல மறுப்பவள், தம்பிக்கு ஆறுதலாக ஏதாவது சொல்லி அனுப்ப வேண்டுமென்று கருதுகின்றாள்.

பஞ்சவடியில் லட்சுமணன் காவல் செய்து கொண்டிருந்ததையும், ராவணன் தன்னைக் கவர்ந்ததையும் வைத்துக் கொண்டு, 'அந்தக் காவலாளியின் கடமைதான் இந்தச் சிறையிலிருந்து விடுவிப்பது!' என்று செய்தி சொல்லுகிறாள்.

இந்தச் செய்தி, லட்சுமணனிடம் இவள் கொண்டிருக்கும் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் காட்டுவதுடன், 'அந்தப் பழைய சமாசாரத்தை நீ தயவு செய்து மறந்து விட வேணுமப்பா!' என்றும் சொல்லாமல் சொல்லி வைக்கிறது.

இளையவனை, 'எத்தும் வென்றி இளையவன்' (யாராலும் கொண்டாடப்படுகின்ற வெற்றி வீரன்) என்று பாராட்டுவதும் கவனிக்கத் தக்கது. சீதையின் இப்போதுள்ள மனநிலையில், எவ்வளவு பொருள் பொதிந்த சொற்றொடர்!

வேரில்லாத பூஞ்செடி


கணவனைப் பற்றிய நிஷ்டூர நினைவு மறுபடியும் வருகிறது:

திங்கள் ஒன்றில், என்
செய்தவம் தீர்ந்ததால்,
இங்கு வந்தில-
னேஎனின், யாணர் நீர்க்
கங்கை யாற்றங்
கரை, அடி யேற்குத்தன்
செங்கை யால்கடன்
செய்கென்று செப்புவாய்!

[திங்கள் ஒன்றின் – ஒரு மாத காலத்தோடு. என் செய்தவம் – நான் கொண்டுள்ள சபதமாகிய தவம். தீர்ந்ததால் – தீர்ந்துவிடு மாகையால். இங்கு வந்திலனே எனின் – ராமன் என்னை மீட்க இங்கே வராவிட்டால். யாணர் நீர் – புது வெள்ளம்.]

குறித்த ஒரு மாதத்திற்குள் வராமற் போனால் பிறகு வரவேண்டிய காரியமே யில்லையாம். அந்த நாளில் அவனோடு கவலையில்லாமல் விளையாடிக் கொண்டிருந்த கங்கை யாற்றங்கரை நினைவிற்கு வருகிறது, இருபுறமும் அமைந்த இயற்கையழகின் மாட்சியோடு. அந்தப் புது வெள்ளத்திலே தோணியில் போகும்போதும் தண்ணீரைச் சிந்தி விளையாடிக் கொண்டே போனார்களல்லவா?

அப்படி யெல்லாம் கொஞ்சிக் குலாவி வனவாச நினைவையே மறந்து பொழுது போக்கிய அந்த நினைவின் வெள்ளம் இப்போது பொங்கி இவளை மூழ்கடிக்க, 'அதே ஆற்றங்கரையில் அடியேனுக்கு அந்திம கிரியை செய்து விடச் சொல்லு;



அந்த அழகிய கையினால் அந்தக் கடனை யாவது செய்யட்டும்!' என்கிறாள்.

பிறகு மாமியாருக்கு ஒரு செய்தி; கைகேயியையும் விலக்கிப் பேசவில்லை:

சிறக்கும் மாமியர்
மூவர்க்கும், 'சீதைஆண்(டு)
இறக்கின் றாள், தொழு-
தாள்' எனும் இன்னசொல்,
அறத்தின் நாயகன்
பால்அருள் இன்மையால்,
மறக்கும் ஆயினும்,
நீமற வேல்,ஐயா!

[சிறக்கும் – சிறந்த. ஆண்டு – அங்கே; அதி தூரத்திலுள்ள இலங்கையில். இன்ன – இப்படிப்பட்ட. மறவேல் – மறக்காதே.]

'அறத்தின் நாயகன் தான்; ஆனால் அருள் மாத்திரம் இல்லை' என்று சொல்வது, 'அழகான பூஞ்செடி; ஆனால் வேர் தான் இல்லை!' என்பது போலத்தான்.

மாமியாரிடம் அனுமனை நேரில் போய்ச் சொல்ல வேண்டுமென்றும், ராமனிடம் சொல்லி வைத்தால் போதாதென்றும், அவனுக்குத் தன்னிடம் அருள் இல்லாததால் ஞாபகப் பிசகும் ஏற்படக் கூடுமென்றும் சொல்வதைக் கேளுங்கள்.

இவ்வளவு மறதியுள்ளவர், தான் இருக்குமிடம் தேடி வந்து தன்னைக் கைப்பிடித்த காலத்திலே வாக்குக் கொடுத்திருந்ததையும் மறந்துவிடக் கூடும் என்கிறாள்:

வந்தெனைக்கரம்
பற்றிய வைகல்வாய்,
'இந்த இப்பிற-
விக்(கு)இரு மாதரைச்
சிந்தை யாலும்
தொடேன்!' என்ற செவ்வரம்
தந்த வார்த்தை
திருச்செவி சாற்றுவாய்!

[வைகல்வாய்—நாளில். செவ்வரம்—சிறந்த வரம்.]

அந்த வார்த்தையிலும் கூட இப்போதுள்ள சந்தேக புத்தி ஒரு குற்றம் கண்டு பிடித்து விடுகிறது. 'இந்த இப் பிறவிக்கு' என்று அவ்வளவு அழுத்தமாகச் சொன்னதிலேயே சந்தேகம். தன்னுடைய காதலோ, இந்த ஒரு பிறப்போடு நின்று விடுவதில்லை யென்கிறாள்.

ஆசையும் ஆசாபங்கமும்

துன்பம், அவநம்பிக்கை யென்னும் இரு கரைகளுக்கிடையே அலைமோதும் காதல் என்ற கங்கையின் புது வெள்ளம் பாருங்கள்:

ஈண்டு நான் இருந்(து)
இன்னுயிர் மாயினும்,
மீண்டு வந்து
பிறந்து தன்மேனியைத்
தீண்ட லாவதோர்
தீவினை தீர்வரம்
வேண்டி னாள்தொழு
தென்று விளம்புவாய்!

[ஈண்டு – இங்கே. தீவினை தீர்வரம் – பழுதற்ற சிறந்த வரம்.]

இந்த இப்பிறவியிலேயே ராமனுடன் பட்டமகிஷியாய் வீற்றிருக்கும் பேறு பெறவில்லையே என்ற ஆசாபங்க நினைவும் வருகிறது;

அரசு வீற்றிருந்-
தாளவும், ஆய்மணிப்
புரசை யானையின்
வீதியில் போகவும்
விரசு கோலங்கள்
காண விதியிலேன்!
உரைசெய் தென்பல?
ஊழ்வினை உன்னுவேன்!

[ஆய் மணி – தெரிந்தெடுத்த மணி; யானை முதுகில் இருபுறமும் தொங்க விடும் மணி. புரசை – யானைக் கழுத்துக் கயிறு. விரசு – பொருந்துகிற. உரை செய்து என்பல – பல சொல்லிப் பயன் என்ன. உன்னுவேன்–நினைத்து வருந்துவேன்.]


தனக்குத்தானே ஏங்கிப் பேசுவது போல் பேசுகிறாள் சீதை, 'அனுமனிடம் பேசுகிறோம்' என்பதைக் கூட ஒருவாறு மறந்து:

தன்னை நோக்கி
உலகம் தளர்தற்கும்,
அன்னை நோய்க்கும்,
பரதன்அங்(கு) ஆற்றுறும்
இன்னல் நோய்க்கும்,அங்(கு)
ஏகுவ தன்றியே,
என்னை நோக்கிஇங்(கு)
எங்ஙனம் எய்துமோ?

[உலகம் – (இங்கே) ராஜ்யத்துக் குடிகள். ஆற்றுறும் – பொறுத்துக் கொண்டிருக்கும்.]

சுந்தர ராமாயணம்

கணையாழியும் சூளாமணியும்



23. மண்டபத்தில் ஒரு தூண்

பிரூ

அனுமன் சீதையை நோக்கி 'மருளும் மன்னவ'னுக்காக ஓர் ஆறுதல்-வாசகம் வேண்டினான், 'இருளும் ஞாலம் இராவணனால்' என்னும் பாட்டிலே. அந்த ஒரு பாட்டுக்குச் சீதையின் விடை பத்துக் கவிகளில் வெளிப்படுகின்றது.

பேச்சின் போக்கு

'ஒரு மாசம் கழிந்த பிறகு நான் உயிரோடிருக்க மாட்டேன்' என்று தொடங்குகிறது சீதையின் வாசகம். தொடங்கவே, 'ஆவி' யென்னும் பறவை அப்படியே கூட்டிலிருந்து பறந்து போகச் சிறகடிப்பது போலவும், அந்தப் பறவையை இவள் பிடித்துக் கொண்டிருப்பது போலவும், அது மீறிப் பறந்து விட முயல்வது போலவும் ஒரு தோற்றம் உண்டாகிறது.

சீதை தொடர்ந்து பேசுகிறாள். 'பேசுகிறாளா, ஏசுகிறாளா ?' என்று கூட மயங்குகிறோம். அவ்வளவு நிஷ்டூரத்துடன் 'வீரம் காத்தலை ... வேண்டுவாய்' என்கிறாள். குழந்தை யுள்ளம் தான் இப்படி யெல்லாம் குமுறுகின்றது என்பதை உணர்ந்து கொள்கிறோம்.

பிறகு லட்சுமணனுக்குச் செய்தி சொல்லுகிறாள் ; மாமிமாருக்குச் செய்தி சொல்லுகிறாள். இந்தச் செய்திக்கும் அந்தச் செய்திக்கும் பொருத்தமில்லை. இடையே அந்த 'மருளும் மன்னவ'னுக்கும் ஒரு செய்தி — மேலும் மருளச் செய்யக்கூடிய செய்திதான் !

அவனுடைய திருமண வாக்குறுதியையும் நினைப்பூட்டித் தன்னுடைய சங்கற்பத்தையும் தெரிவித்து வரம் வேண்டுகின்றாள். 'அவனது பட்டாபிஷேக விழாவைக் கண்டு களிக்க இயலாத என் விதியைத் தான் நான் நொந்து கொள்ள வேண்டும். அவனையோ பிறரையோ குற்றங் கூறிப் பயனில்லை' என்கிறாள்.

இதற்கு முன் 'தயா எனும் வீரம் தான் அகத்து இல்லை யென்றாலும்' என்று கூறியவள், இப்போது அந்த ஈர நெஞ்சமே அவனைத் தன்னை நோக்க விடாது பரதனை நோக்கியும், அன்னையை நோக்கியும், தளர்கின்ற நாட்டை நோக்கியும் இழுத்துச் சென்றுவிடும் என்கிறாள். 'அத்தனை பேர் அங்கே கஷ்டப்படும் போது நான் ஒருத்தி படும் துன்பத்தை நினைத்து வரமாட்டான் !' என்று ஏங்குகிறாள்.

'ராமன் கொலு வீற்றிருப்பதையும், பவனி வருவதையும் காணக் கொடுத்து வைக்கவில்லையே !' என்று நொந்து கொண்டவள், தடைப்பட்ட பட்டாபிஷேகம் இனி எப்படியும் இனிது நிறைவேற வேண்டியதுதான் என்று ஆசைப்படுவதாகச் சொல்லி முடிக்கிறாள்.

அது தான் தனக்கு ஆத்மசாந்தி என்பது குறிப்பு :

எந்தை,யாய் முதலிய
  கிளைஞர் யார்க்கும்,என்
வந்தனை விளம்புதி ;
  கவியின் மன்னனைச்
சுந்தரத் தோளனைத்
  தொடர்ந்து காத்துப்போய்
அந்தமில் நெடுநகர்க்(கு)
  அரசன்ஆக் கென்பாய் ;

[எந்தை – எனது தந்தையான ஜனக மகாராஜா. யாய் – தாய். கிளைஞர் – சுற்றத்தவர். விளம்புதி – சொல்வாயாக. கவியின் மன்னனை – வானர ராஜாவாகிய சுக்கிரீவனை நோக்கி. சுந்தரத் தோளனை – அழகிய தோள்களையுடைய ராமனை. அந்தமில் நெடு நகர்க்கு - எல்லையில்லாத அந்த அயோத்திமா நகரத்திற்கு.]

ஒரு புதிய கலாசிருஷ்டி

அழுகைப் போல் துன்பம்; துன்பத்தைப் போல் அவநம்பிக்கை! சீதையின் பெண்மை யுள்ளத்தைத் தான் எப்படி யெல்லாம் படம் பிடிக்கப் பார்க்கிறது கம்பனின் கவிதையுள்ளம்!

'ஒரு திங்கள் இருப்பல் யான்' என்று சீதை கூறுவதும், 'பின்னை ஆவி பிடிக்கின்றிலேன்' என்று கூறுவதும் கூட, வால்மீகத்தின் மொழிபெயர்ப்பே. ஆனால் அத்தகைய ஆரம்பத்துடன் சீதை அனுமனை நோக்கிக் கூறியவை, கம்பனுக்கே உரிய ஒரு தனிப் பெருங் கற்பனைச் சித்திரமாக உருவெடுக்கின்றன. வால்மீகத்திலே ஊறிக்கிடந்த மேதையின் புத்தப் புதிய கலாசிருஷ்டி கம்ப சித்திரம் என்பதை அறியாதாரே கம்பன் கவிதையை மொழிபெயர்ப்பு என்பர்.

இனி, இந்தப் பெண்மையுள்ளத்திற்கு முன், இவ்வளவு அவநம்பிக்கைக்கு முன், அனுமனுடைய வாக்கு வன்மையும் தோற்றுப் போகிறது என்றுதானே கருதுகிறோம்? ஆனால், தோல்வி தாற்காலிகமானது தான்.

கடைசியில் முழு வெற்றியும் பெற்றுத்தானே சூடாமணியும் பெற்றுக் கொள்ளப் போகிறான்? அந்த வெற்றி மண்டபத்திற்கு இந்தத் தோல்வியும் ஒரு தூணாக — அழகிய தூணாக அமையப் போகின்றது.

தோல்வியை வெற்றியாக்கிய சொல்வன்மை

இது நிற்க. ராமன் தன்னைச் சிறை மீட்கவில்லையே என்று வெறுத்து மனங் கசந்து பேசும்போதும், சீதைக்கு அவன் மீதிருந்த ஆழ்ந்த அன்பு குமிழியிடத்தானே செய்கிறது? அந்தப் பேச்சின் சிகரமாக, 'அவராவது முடி சூட்டிக் கொண்டு க்ஷேமமாக வாழவேண்டும்' என்று சொல்லி முடிக்கிறாளல்லவா?

இதை ஒட்டிப் பேசுவது போல அனுமன் பேசத் தொடங்குகிறான். தொடங்கி, அவள் விசன மிகுதியால் சொன்னது சரியன்று என்பதை விநய மிகுதியுடன் எவ்வளவு சாதுரியமாய்க் காட்டப் போகிறான்!

'ஓ நீ உயிர் விடுவாய்; இங்கு வராமலே ஒய்ந்திருக்கும் ராமன் பிழைத்திருப்பானும், ஊருக்கும் போவான்! போனால்தானே நீ சொன்னபடி முடிசூடி வாழலாம்!' என்று அனுமன் தொடங்குவதைக் கேளுங்கள்;

> வீவாய் நீஇவண்;
> மேவாதே
> ஒய்வான் இன்னுயிர்
> உய்வானும்;
> போவான் அந்நகர்;
> புக்கன்றோ
> வேய்வான் மோலியும்;
> மெய்யன்றோ?

[வீவாய் நீஇவண் – நீ இங்கே இறப்பாய். மேவாதே ஒய்வான் – இங்கு வராமலே ஒய்ந்திருக்கும் ராமன். இன்னுயிர் உய்வானும் – இனிய உயிர் பிழைத்திருப்பானும். போவான் அந்நகர் – அந்த நகரத்திற்கும் போவானும். புக்கு அன்றோ – அங்கே போய்ச் சேர்ந்தல்லவா? வேய்வான் மோலியும் – கிரீடத்தையும் சூட்டிக் கொள்வான். மெய் அன்றோ – இவை யெல்லாம் உண்மை நிகழ்ச்சி யல்லவோ?]

'நாங்களும் உயிரைச் சுமந்துகொண்டு அங்கே போவோம்; அவனும் வில்லைச் சுமந்து கொண்டு போக வேண்டாமோ? அல்லது வில்லையும் போட்டு விட்டே போய் விடுவானோ?' என்றெல்லாம் தொடரும் பேச்சு, இவளுடைய கவனத்தைக் கொஞ்சங் கொஞ்சமாய் வசீகரித்து உத்ஸாக மூட்டப் போகிறது.

> நல்லோய்! நின்னை
> நலிந்தோரைக்
> கொல்லோம்; எம்உயிர்
> கொண்(டு) அங்கே
> எல்லோ ரும்செல,
> எம்கோனும்

**வில்லோ டும்செல்
வேண்டாவோ ?**

[நல்லோய் – நற்குண நற்செய்கை உடையவளே. நலிந்தோரை – வருந்தச் செய்தவர்களை. கொல்லோம் – கொல்லாதவர்களாய். எல்லோரும் – நாங்கள் எல்லாரும். செல – செல்ல. எம் கோனும் – எங்கள் தலைவனாகிய ராமனும்.]

சீதை வருந்திப் பேசியதுடன் பொருந்தப் பேசுவது போலவும், சற்று ஹாஸ்யமாகவும் தொடங்கும் பாடல்கள், சந்தர்ப்பத்திற்குத் தகுந்த சந்தத்துடன் தொடர்ந்து வந்து சீதை யுள்ளத்தைக் குளிர்விக்கின்றன ; குதூகலப் படுத்துகின்றன.

'உன்னைச் சிறை வைத்த ராவணனும் உயிர் வாழ்வானும் ; ராமலட்சுமணரும் உன்னை மறந்து ஊருக்குப் போய் உயிர் வாழ்வார்களாம்' என்றெல்லாம் சொல்லும் போதே, சீதைக்கே தன் வார்த்தை சரியன்று என்பது புலனாகி விடுகிறது.

இந்தக் கருத்து–மாற்றத்தைத் தான் எவ்வளவு நயமாகவும் நியாயமாகவும் சாதுரியமாகவும் உணர்த்தி விடுகிறான் :

**கைத்தோ டும்சிறை
கற்போயை**

**வைத்தோன், இன்னுயிர்
வாழ்வானும் !**

**பொய்த்தோர் வில்லிகள்
போவாராம் !**

**இத்தோ(டு) ஒப்பது
யா(து) உண்டே ?**



[கைத்து – வெறுத்து. சிறை – சிறையிலே. கற்போயை – கற்புடையவளாகிய உன்னை. பொய்த்தோர் போவாராம் – பொய்த்துப் போவார்களாம். வில்லிகள் – வில் வீரர்களான ராம லட்சுமணர்கள்.]

பேச்சினிடையே ராட்சஸவதம் செய்வதாகத் தண்டகாரணிய முனிவர்களுக்குச் சீதை கண் முன்னே ராமன் செய்த வாக்குத் தத்தத்தை நினைப்பூட்டுகிறான். பின்பு அவளைப் பிரிந்த நிலையில் ஜடாயு கண் முன்னே மூன்று லோகங்களையும் – துஷ்டர் சிஷ்டர் என்ற வேற்றுமை இல்லாமல் – வதைத்து விடுவதாகப் பொங்கிய அந்தக் கோபாவேசத்தையும் அப்படியே சீதை கண் முன் காட்டி விடுகிறான் ;

முன்னே மூவுல-
கும்கொல்வான்,
பொன்னே ! பொங்கிய
போர்வில்லான்,
என்னே ! நின்நிலை
ஈதென்றால்,
பின்னே செம்மை
பிடிப்பானோ ?

[பொன்னே – சீதாலட்சுமியே.]

இந்தக் கேள்வியிலேயே ராமனது வாழ்க்கையின் உயிர்நிலை சீதை காதல் தான் என்பதை எவ்வளவு சாதுரியமாக வற்புறுத்துகிறான் இச் சொல்லின் செல்வன் !

இதைத் தொடர்ந்து எவ்வளவு உருக்கமாக மன்றாடுகிறான் பாருங்கள் :

'படுத்தான் வானவர்
பற்றாரை ;
தடுத்தான் தீவினை ;
தக்கோரை
எடுத்தான் ; நல்வினை
எந்நாளும்
கொடுத்தான் !' என்றிசை
கொள்ளாயோ ?

[படுத்தான் – அழித்தான். பற்றார் – சத்துருக்கள். தக்கோர் – தகுதி வாய்ந்தவர்.]

'தர்மமூர்த்தி தர்மத்தைக் கைவிட்டான் என்னும் அபகீர்த்தியை வாழ்க்கைத் துணையாகிய நீ கொள்ளலாமா?' என்பதை உய்த்துணர வைத்து, லோக க்ஷேமத்தையும், ராமனுடைய க்ஷேமத்தையும், அவனுடைய தர்ம வாழ்க்கையை உருவாக்குகின்ற காதலியின் அபார சக்தியோடு எவ்வளவு உசிதமாகப் பிணைத்துப் பேசுகின்றான் !

அப்பால் சீதையின் காதல் ராமனுடைய வீரதர்மத்திற்கும் உலக நன்மைக்கும் உயிரா யிருப்பதுபோல், இவளுடைய தியாகமும் இன்றியமையாதது என்கிறான்.

ஆனால், உயிரைவிட வேண்டிய தன்று இவள் இப்போது செய்யவேண்டிய தியாகம் :

சின்னாள் நீ இடர்
தீராதாய்,
இன்னா வைகலின்,
எல்லோரும்
நன்னாள் காணுதல்
நன்றன்றோ,
உன்னால் நல்லறம்
உண்டானால் ?

[இன்னா – துன்பம். வைகல் – தங்கியிருத்தல்.]

ஏற்கெனவே சீதைக்குக் கோப மூட்டிய அந்தக் கொள்கையைத் தான் இப்போதும் சொல்லுகிறான். ஆனால் சீதை இப்போது அமைதியாகவே கேட்டுக் கொண்டிருக்கிறாள்.

அனுமனுடைய அந்தத் தோல்வி தான் இப்போது வெற்றியை நோக்கித் திரும்பி விட்டதே !

* * * *

அப்போது இரண்டு அடிகளில் வற்புறுத்திய அதே பெருங் கொள்கையை இப்போது இரண்டு பாடல்களில் அனுமன் வற்புறுத்தி ஒரளவு வெற்றி கண்ட பின், ராம பராக்கிரமத்தையும் வற்புறுத்துகிறான்.


பிறகு, ஏதோ ஒரு திரையை விலக்கிக் கொண்டு சமீப எதிர்காலத்தையே பார்த்து விடுவதுபோல் அந்த ராம-ராவண யுத்த பயங்கரங்களைச் சீதை மனக் கண்முன் தோற்றுவிக்கிறான்.

இப் பேச்சினிடையே, அவ்வளவு புரட்சிமயமாகத் தொழிற் படப் போகும் அந்த மகத்தான சக்தி, ராம பராக்கிரமத்தைக் காட்டிலும் அதிக அளவில் சீதை பராக்கிரமம் தான் என்று கூடக் குறிப்பிடுகிறான்.

இப்படியெல்லாம் பேசி வெற்றியின் சிகரத்தைக் காணும் அனுமன் பேச்சிலே முதலாவது பகுதியைத் தான் இப்போது கேட்டிருக்கிறோம்.

சுந்தர ராமாயணம்

கணையாழியும் சூளாமணியும்



பிருந்

24. காலத்திரை கிழிந்ததா?

'உன் தியாக வீரமே உலகத்திற்கெல்லாம் நன்மை அளிக்கப்போகிறது' என்று சீதையை நோக்கிச் சொன்ன அனுமன், ராமனுடைய செயல்-திறமையாகிய தர்ம வீரத்தை எதிர்த்து நிற்கக்கூடிய சக்தி ஒன்றுமே இல்லையென்பதையும் வற்புறுத்துகிறான்.

அருள் வீரமும் தர்ம வீரமும்

சிறைபுகுந்து தவம் கிடக்கும் செல்வியின் தியாக வீரத்திற்கு ராமனது தர்மாவேசமாகிய சத்திய வீரம் அரண் செய்யும்; ஆனால் உலக க்ஷேமத்திற்குச் சீதையின் தியாகமே அதி முக்கியமானது என்பது அனுமன் கொள்கை.

இக்கொள்கையை ஒருவாறு சீதைக்கு வெளியிட்டபின், 'இந்தக் கடலெல்லாம் அந்த மகாவீரனுக்குப் பிரமாதமா?' என்று பேசத் தொடங்குகிறான். கடலுக்கு நடுவே சிறையிருக்கும் சீதைக்கு, அந்தக் கடல் எவ்வளவு அவநம்பிக்கையையும் அதைரியத்தையும் உண்டாக்கிக் கொண்டிருக்கிறது!

'இந்தக் கடலை எவ்விதமாகத் தான் ராமன் கடந்து வரப் போகிறானோ?' என்ற ஏக்கம் சீதை உள்ளத்தில் ஊறி உதிரத்திலேயே கலந்து விட்டது போலக் காண்கிறது. இந்த நிலையில் அவளைப் பார்த்து அனுமன், 'கடலா இது? தண்ணீர் வைத்திருக்கும் தாழிப் பானை தானே ராமபிரானுக்கு?' என்கிறான்.

கடலோடு உலகங்களெல்லாம் ராம பராக்கிரமத்தை எதிர்த்து நிற்க முடியுமா? சக்ராயுதம் சுழற்றிய கையல்லவா அம்பு வீசப் போகிறது?

கடலோடு நிலத்தையும் ஊழித் தீ உண்ணுவது போல் அந்த ராம பாணங்கள் உண்டு விடுமல்லவா?

இப்படி யெல்லாம் அனுமன் பேசுகிறானா? அல்லது இப்படி ஒரு பயங்கரமான காட்சியையே சீதையின் மனக்கண்ணுக்கு எதிரே காட்டி விடுகிறானா, சீதையின் சோர்வினுக்கு ஓர் அதிர்ச்சி வைத்தியம் செய்வது போலே?

இதோ பாருங்கள் கடல் படும் பாடும் உலகு படும் பாடும்;

**தாழித் தண்கடல்
 தம்மோடும்
ஏழுக் கெழுல
 கென்றாலும்,
ஆழிக் கையவன்
 அம்பம்மா
ஊழித் தீயென
 உண்ணுவோ?**

[தாழி-வாயகன்ற பானை. ஆழி-சக்ராயுதம். ஊழி-யுகாந்த காலம்.]

ராமன் வருமுன்பே யுத்தம் வந்து விட்டதா?

இத்தகைய உத்ஸாக வெறியோடு பாய்ந்து எதிர் காலத்தை மூடியிருக்கும் திரையையே சிறிது கிழித்து விடுகிறான்; அனுமன் வாக்கே இப்போது பாணங்களைப் போல் நெருப்பைக் கக்குகிறது!

யுகாந்த காலமே வந்துவிட்டதா திடீரென்று? ராமபாண இடி முழக்கங்

கள்; நீரும் நிலமும் எல்லாம் ஒரே நெருப்பு! ஒரே இரத்த வெள்ளம் ராட்சஸ வர்க்கம் இருந்த இடமெல்லாம்!

இரத்த வெள்ளத்திலே பேய்களின் ஜலக்கிரீடை: அந்தப் பேய்களுக்குத் தான் என்ன பயங்கர உத்ஸாகம்! முங்கி முழுகி விளையாடுகின்றன.

அந்த விளையாட்டைப் பார்க்க வேண்டுமென்று வருகிறார்கள் தேவர்கள். ஆம்; அரக்கருக்கு அஞ்சி இருக்குமிடம் தெரியாமல் தலை மறைவாயிருந்த அதே தேவர்கள்!

தங்கள் மறைவிடங்களிலிருந்து உத்ஸாகமாய்த் தலை தூக்கி நிமிர்ந்து வெளிப்படுகிறார்கள்.



புளிக்கும் கண்டகர்
  புண்ணீருள்
குளிக்கும் பேய்குடை
  யுந்தோறும்
ஒளிக்கும் தேவர் உ-
  வந்(து) உள்ளம்
களிக்கும் நல்வினை
  காணுயோ?

[புளிக்கும் — வெறுக்கத் தக்க. கண்டகர்—முள்ளைப் போலக் கொடிய அரக்கர்கள். புண்நீர் — இரத்த வெள்ளம். குடையும் தோறும் — முங்கி முழுகி விளையாடும்போதெல்லாம்.]

வேறொரு காட்சி. கணவர்களை இழந்த ராட்சஸக் குலிகள் (கர்ப்பஸ்திரீகள்) கருவுற்ற பெரு வயிற்றில் அடித்துக் கொண்டு தாலிகளை அறுத்துப் போடுகிறார்கள். அந்தத் தாலிகள் மலை போலக் குவிந்து விடுகின்றன!

'வாலியும் கடத்தற்கு அரிய மலை!' என்கிறான் அனுமன்:

சூல்இரும் பெருவயி(று)
  அலைத்துச் சோர்வுறும்
ஆலிஅங் கண்ணியர்,
  அறுத்து நீத்தன,
வாலியும் கடப்பரு
  வனப்ப, வானுயர்
தாலியம் பெருமலை
  தயங்கக் காண்டியால்!

[சூல் இரும் பெரு வயிறு அலைத்து — கர்ப்பத்தையுடைய மிகப் பெரிய வயிற்றைப் பிசைந்து கொண்டு. சோர்வு உறும் - சோர்ந்து போகிற. ஆலி அங் கண்ணியர் - நீர்த் துளிகளைக் கொண்ட அழகிய கண்களை யுடைய அரக்கியர். நீத்தன — கழித்தனவாகிய. கடப்பரு வனப்ப — கடத்தற்கு அரிய வளர்ச்சியுடையனவாய். தயங்கக் காண்டி — விளங்குவதைக் காண்பாய்.]

இந்த அரக்கியர் கண்ணீரை ஆறுகப் பெருக்குவார்களல்லவா? இந்தக் கண்ணீராற்றிலே குளிக்கின்றன, இரத்தக் கடலில் நீந்தி விளையாடிக் கொண்டிருந்த அந்தப் பேய்களில் சில, கழுகு முதலிய பட்சிகளோடு.

புண்ணிய காலத்திலே கடலாடுவோர் உவர்ப்பும் மணலும் நீங்க நன்னீரில் குளிப்பதுண்டல்லவா?

இதோ இப்படியும் ஒரு பயங்கரமான காட்சியைச் சீதை மனக் கண்முன் காட்டுகிறான் அனுமன்;

விண்ணின்நீ ளியநெடுங்
  கழுதும், வெஞ்சிறை
எண்ணின்நீ ளியபெரும்
  பறவை ஈட்டமும்,



புண்ணினீர்ப் புணரியில்
படிந்து, பூவையர்
கண்ணினீர் ஆற்றினில்
குளிப்பக் காண்டியால்!

[விண்ணின் நீளிய — ஆகாயம்போல் உயர்ந்தவையாகிய; அதாவது, ஆகாயத்திற்கும் பூமிக்குமாக ஒரே தோற்றமாய் நிற்கிற. நெடுங் கழுதும் - நீண்ட பேய்களும். எண்ணின் நீளிய - தொகையில் உயர்ந்தவையாகிய; அதாவது எண்ணிறந்த. வெஞ்சிறைப் பெரும் பறவை ஈட்டமும் — பார்க்க அழகாயிருக்கும் கொடிய சிறகுகளை யுடைய கழுகு முதலான பெரும் பறவைகளின் கூட்டமும். புண்ணின் நீர்ப் புணரியில் - அரக்கர்களுடைய இரத்த வெள்ளமாகிய கடலில். படிந்து - முழுகி. பூவையர் கண்ணின் நீர் ஆற்றினில் - அரக்கியரது கண்ணீர்ப் பெருக்காகிய ஆற்றில். குளிப்பக் காண்டி - குளிப்பதைக் காண்பாய்.]

கண்ணீரை வெள்ளமாகக் கொட்டும் அரக்கியரைப் 'பூவையர்' என்று காட்டுவது காட்சியின் கொடுமையை மேலும் அதிசப்படுத்துகிறது.

எமனுக்குத்தான் என்ன விருந்து, என்ன அஜீர்ணம்! அநுமன் காட்டச் சீதை காண்கிறாள்:

ஞாலம்முற் றுறுகடை
யுகத்தும் நச்சருக்
காலனும் வெறுத்(து)உயிர்
காலக் காண்டியால்!

[ஞாலம் — உலகம். முற்றுறு — முடிந்து போகிற. கடையுகத்தும் — யுகாந்த காலத்திலும். நச்சு அறு — (உயிர்களை விருந்தாக்கிக் கொள்வதில்) விருப்பம் நீங்காத. காலனும் — எமனும். வெறுத்து — அந்த விருந்துச் சாப்பாட்டில் வெறுப்படைந்து. உயிர் கால - (அளவுக்கு மிஞ்சி மிகுதியாக ஒருவன் உண்ட உணவைக் கக்குவது போல்) உயிர்களைக் கக்கி வெளிப்படுத்துவதையும். காண்டி - காண்பாய்.]

'உயிர் கால' என்பதற்குப் 'பெருமூச்சு விட' என்றும் பொருள் கொள்ளலாம். மூச்சுத் திணறிப் பெருமூச்சு விட்டுக் கொண்டே, ராட்சஸ உயிர்களை மிகுதியாகப் பட்சித்துவிட்ட காலன் அஜீர்ணம் கொண்டு, தான் முன் தின்ற

உயிர்களைக் கக்கத் தொடங்குகிறான் என்ற காட்சியின் கோர பயங்கரத்தை என்னென்பது?

அளவுக்கு மிஞ்சி விருந்து சாப்பிட்டு அஜீர்ணப்பட்டவன் பயங்கரமான சொப்பனங்களைக் காண்பானல்லவா? அத்தகைய சொப்பனங்களைக் காட்டுவது போலத்தான் அனுமனும் ராம ராவண யுத்தக் காட்சிகளை முன்கூட்டியே காட்டுகிறான்.

சீதையும் சொப்பனம் காண்பது போலவே காண்கிறாள்: ஆனால் இத்தகைய காட்சிகள் இப்போது சீதையைப் பயமுறுத்தவில்லை; தைரிய மூட்டத்தான் செய்கின்றன.

அதோ ஒரு காட்சி. இலங்கைக் கற்பகச் சோலைகளிலுள்ள குளங்களில் அரக்க வீரர்கள் தங்கள் காதலிமாருடன் ஆனந்தமாக நீராடுவதுண்டு. அந்த அழகான நீராடு துறைகளில் — என்ன விபரீதம்!

அதோ பார்த்துக் கொள்ளுங்கள்:

அணங்கன மகளிரொ(டு)
அரக்கர் ஆடுறும்
மணம்கிளர் கற்பகச்
சோலை வாவிவாய்,

பிணங்குறு வால்முறை
பிடித்து மாலைய
கணம்கொடு, குரக்கினம்
குளிப்பக் காண்டியால்!

[அணங்கு அன மகளிர் – தெய்வப் பெண் போன்ற அழகிய ராட்சஸ இளம் பெண்கள். ஆடுறு – நீராடுவதற்கு இடமான. மணம் கிளர் – மணம் மிகுந்த. வாவிவாய் – குளங்களிலே. பிணங்குறு – சிறிது வளைந்த. வால் முறை பிடித்து – ஒன்றன் வாலை மற்றொன்று பிடித்துக் கொண்டு. மாலைய – ஒழுங்காகிய. கணம் கொடு – கூட்டமாக. குரக்கினம் – குரங்குக் கூட்டங்கள். காண்டி – காண்பாய்.]

தண்ணீரில் இறங்குவதென்றால் குரங்குகளுக்கு உத்ஸாகம் ஏது? பயம் தானே? எனினும், ஒன்றையொன்று வாலைப் பிடித்துக் கொண்டு குரங்குக் கூட்டம் ஒரு சங்கிலித் தொடர் போலத் தொங்கு பாலம் அமைத்து நீரோடை மலையருவிகளைக் கடந்து போவதுண்டு. அத்தகைய காட்சியை எங்கேயோ கம்பன் மலைக் காட்டில் பார்த்திருக்கலாம்.

ஆகவே, குரங்குக் காதலரும் காதலிகளும் வால்பிடித்து மாலையாகப் போய் நீராடும் காட்சியைப் படைத்துக் காட்டுகிறான் அனுமன் வாயிலாக, ராட்சஸக் காதலர்கள் கை கோத்து ஜலக்கிரீடை செய்யும் சிங்காரப் பூந்தடாகத்திலே.

அதோ குரங்குகள் அவசர அவசரமாக நாடக சாலைக்குப் போகின்றன! அங்கே இப்போது ரம்பை முதலிய தெய்வப் பெண்கள் நடனமாடவில்லை.

அந்த நாடக மேடை – நட்சத்திரங்களுடைய ஸ்தானத்திலே குரங்குகள் பரத நாட்டியம் பிடிக்கின்றன:

கரம்பயில் முரசினம்
கறங்க, கைதொடர்
நரம்பினும் இமிழ்இசை
நவில நாடகம்

அரம்பையர் ஆடிய
அரங்கின், ஆண்தொழில்-
குரங்குகள் முறைமுறை
குனிப்பக் காண்டியால்!

[கரம் பயில் - கைகளால் அடிக்கப்படுகிற. முரசினம் - (இங்கே) மத்தளங்களின் வகை. கறங்க – ஒலிக்க, கை தொடர் – கையினால் தடவி வாசிக்கிற. நரம்பினும் - யாழ் நரம்பின் ஒலியைக் காட்டிலும். இமிழ் இசை நவில –இனிமையாக ஒலிக்கும் பாட்டுக்களின் இசை பொருந்த. நாடகம் – (இங்கே) பரத நாட்டியம். அரங்கு — நாடக மேடை. ஆண் தொழில் - பராக்கிரமச் செயல். முறை முறை–வரிசை வரிசையாக. குனிப்ப–கூத்தாட. காண்டி – காண்பாய்.]


வீர வானரங்கள் வால் வீசி நாடக மேடையில் 'குர் குர்' சங்கீதம் பாடிக் கூத்தாடும் காட்சி, இப்போது சீதைக்குத் தெய்வ நடனங்களைக் காட்டிலும் இனிமையாகத் தோன்றுகிறது.

லங்கா பட்டணத்தின் போகமும் பொருளும் கலைச் செல்வத்தோடு நாசமடையும் காட்சி யுத்தக் கொடுமைகளில் ஒன்று. ராம ராவண யுத்தமானாலும் யுத்தம் யுத்தம் தானே?

அரக்கர் நாசத்தையும், ராமனுடைய பரிபூர்ண வெற்றியையும் நாடகத்தில் பார்ப்பது போலப் பார்த்து விடுகிறாள் சீதை, சொல்லின் செல்வனின் வாக்கு வசீகர சக்தியால்.

சுந்தர ராமாயணம்

கணையாழியும் சூளாமணியும்



25. வார்த்தையா, மந்திரமா ?

பிரு

தூரத்தில் ஏதோ ஒரு நாடக மேடையில் திரை விலகப் பயங்கர நாடகம் ஒன்று பார்த்துக் கொண்டிருக்கிருள் சீதை. சற்றும் பயமில்லாமல் தான். ஓரளவு உத்ஸாகத்துடனும் தான். அந்த நாடகம், ஸ்ரீ ராம விஜயம்.

உருகாதார் ஊரும் உருகும் !

அந்த விஜயம் ராமனைக் காட்டிலும் ஸ்ரீ யாகிய தனக்கே உரியது என்பதைத் தான் எவ்வளவு தெளிவாகக் காண்கிருள் இப்போது!

காட்சி: லங்கா தகனம். அரக்கர்களைச் சுட்டெரிக்கும் நெருப்பு அனுமனுடைய வாலிலிருந்து கொளுத்தப்படவில்லை, இந்த நாடகத்திலே. நெருப்பிற்குக் காரணம் சீதைதான்; கற்புக் கனலாகிய சீதையே தான்! கனலை ஊதி ஜொலிக்கச் செய்யும் காற்றே ராம பாணம்.

அரக்கர்களின் தென்னிலங்கையாகிய பொன்னிலங்கை உருகும் அதிசயத்தைப் பார்க்கிருள்:

வினையுடை அரக்கராம்
இருந்தை வெந்துக,
சனகிஎன்(று) ஒருதழல்
நடுவண் தங்கலால்,
அனகன்கை அம்பெனும்
அளவில் ஊதையால்,
கனகநீ(டு) இலங்கைநின்(று)
உருகக் காண்டியால் !

[வினையுடை - தீவினையுடைய. இருந்தை - கரி. உக - கெட்டுப்போக. நடுவண் - நடுவில். அனகன் - குற்றமற்றவன், (இங்கே) ராமன். அளவில் ஊதை - அளவில்லாத காற்று. கனகம் - பொன். நீடு - பெரிய.]

பொன்னை உருக்குவதற்குக் கரிக் குவியலைக் குவித்து வைத்துப் பொற்கொல்லன் 'குழல்' மூலமாக ஊதுகிருனல்லவா? இங்கே கரிக் குவியலாக அமைந்திருக்கிறது தீவினையுடைய அரக்கர் கூட்டம்.

தேகக் கறுப்பில் குற்றமில்லை: ராமனும் நீலக் கருமேனியன் தானே? அரக்கர்களின் தீவினைக் கருமை நிழலாடுகிறது அந்த உருவக் கருமையிலே!

'கரி வெந்து நீருக வேண்டாம்; பொன் உருகிப் போகவேண்டாம்' என்பது தான் ராட்சஸ வர்க்கத்தின் நினைப்பு. அப்படி நினைப்பவர் தழலைக் கரிக்கு நடுவில் கொண்டு வைக்கலாமா? அந்தப் பைத்தியச் செயலைத் தானே அரக்கர் கோன் செய்திருக்கிருன்?

ராமபாணமாகிய காற்று வீச வேண்டியது தான் பாக்கி; கரி வெந்து சாம்பலாகிப் போய்விடும்; லங்காபுரியே உருகிப் போய்விடும்!

இந்த நாடகம் மறைகிறது; அனுமன் குதூகலமாய்ப் பேசிக் கொண்டிருப்பது நினைவிற்கு வருகிறது. 'காண்பாய்!' என்று அனுமன் காட்டிய காட்சிகளெல்லாம் அந்த வாக்குப் பிரவாகத்தின் அதிசய விளைவுகளே என்பதைச் சீதை உணர்ந்து கொள்கிருள்.



வந்து சென்று-உடம்பின் உள்ளே வந்தும், வெளியே போயும். இடை தத்துறும் உயிரொடு—இடையே தத்தித் தடுமாறித் தவிக்கின்ற உயிரும். புலன்கள் தள்ளுறும்—புலன்களும் தள்ளாடுவதால் ஏற்படுகின்ற பைத்தியமும். நின் பிரிவினின் பிறந்த வேதனை — உன்னை விட்டுப் பிரிந்ததால் ஏற்படுகின்ற மற்றைத் துன்பங்களும். எத்தனை உள — எவ்வளவு உள்ளனவோ. அவை எண்ணும் ஈட்டவோ— அவையெல்லாம் எண்ணிச் சொல்லும் தன்மை யுடையனவோ.]

'இப்படிப்பட்டவன் தாமதிப்பானு?' என்று கேட்கிறான் அனுமன்:

இந்நிலை உடையவன்
தரிக்கும் என்றியேல்,
மெய்ந்நிலை உணர்ந்துழி
மிடைந்த(து) ஈதெனின்,
பொய்ந்நிலை காண்டி ;யான்
புகன்ற யாவும்உன்
கைந்நிலை நெல்லியங்
கனியிற் காட்டுகேன்.

[இந் நிலை உடையவன் - உன் பிரிவினால் இப்படி அளவிடற்கரிய துன்ப நிலைமையை அடைந்துள்ள ராமன். தரிக்கும் என்றியேல் - உன்னைப் பிரிந்து உயிர் வாழ்ந்திருப்பான் என்று சொல்வாயானால். மெய் நிலை உணர்ந்துழி - உண்மையான நிலையை ஆலோசிக்குமிடத்து. மிடைந்தது ஈது எனின் - பொருந்தியது இது ஆதலால். பொய் நிலை காண்டி — நீ சொல்வது பொய் பொருந்தியது என்பதைக் காண்பாய். யான் புகன்ற யாவும் - நான் சொன்ன எல்லாவற்றையும். உன் கைநிலை நெல்லியங்கனியின் —உன் உள்ளங்கை நெல்லிக்கனி போல. காட்டுகேன் - நான் கண்கூடாகக் காண்பிப்பேன்.]

அடுத்த காட்சி

சீதை குறித்த ஒரு மாதத் தவணை கூட வேண்டாம் என்று அனுமன் கூறுவதும், இப்போது தெளிவாய் இவள் காதில் விழுகிறது. 'நான் ராமனைக் காண வேண்டியது தான் தாமதம்!' என்கிறாள்.

ராமனுடைய துன்பத்தைத் துன்பமென்று கூட அனுமன் சொல்லவில்லை. ஞாபகத்தோடு அனுபவிப்பது தானே துன்பம்? இடியிடித்தாலும் உணர்வு உண்டாவதில்லையாம்.

பித்துப் பிடித்தவனைப் போலச் சீதையையே நினைத்துக் கொண்டிருக்கும் ராமனைக் காட்டுகிறான் அனுமன் அடுத்த காட்சியிலே:

மத்துறு தயிரென
வந்து சென்(று)இடை
தத்துறும் உயிரொடு
புலன்கள் தள்ளுறும்
பித்தும்,நின் பிரிவினிற்
பிறந்த வேதனை
எத்தனை உள,அவை
எண்ணும் ஈட்டவோ ?

[மத்து உறு தயிர் என - மத்தினால் கடையப் படுகிற தயிர் போல.

மூன்றாவது காட்சி

கடலைத் தூர்த்து வந்து லங்காபட்டணத்தை முற்றுகை செய்யும் வானரங்

களின் ஆரவாரம் விரைவில் சீதை காதில் விழப்போகிறது என்கிறான் :

தீர்த்தனும் கவிகுலத்(து)
இறையும், தேவி ! நின்
வார்த்தைகேட்(டு) உவப்பதன்
முன்னர், மாக்கடல்
தூர்த்தன இலங்கையைச்
சூழும் மாக்குரங்(கு)
ஆர்த்தது கேட்(டு) உவந்(து)
இருத்தி அன்னை நீ !

[தீர்த்தனும் – பரிசுத்த மூர்த்தியாகிய ராமபிரானும். கவிகுலத்து இறையும் – வானரக் கூட்டத்தின் மகாராஜாவாகிய சுக்கிரீவனும். தேவி – ராம பத்தினியே. நின் வார்த்தை கேட்டு உவப்பதன் முன்னர் – உன் வரலாற்றை என் மூலமாகக் கேட்டு மகிழ்வதற்கு முன்னமே; அதாவது அவ்வளவு துரிதமாய். மாகடல் தூர்த்தன – பெரிய கடலைத் தூர்த்து விட்டு, இலங்கையைச் சூழ்ந்து முற்றுகை செய்கிற. மா குரங்கு – பெரிய குரங்குகள். ஆர்த்தது கேட்டு – ஆரவாரித்தது கேட்டு. உவந்து இருத்தி – மகிழ்ந்திருக்கப் போகிறாய். அன்னை – தாயே.]

'அந்த வானர சேனை மத்தியிலே கருடாருடனை மகாவிஷ்ணுவைப் போல் என் தோள்மேல் வீற்றிருக்கும் ராமபிரானை நீ காண்பாய்' என்கிறான் அனுமன் :.

எண்ணரும் பெரும்படை
நாளை இந்நகர்
நண்ணிய பொழு(து),அது
நடுவண் நங்கை! நீ
விண்ணுறு கருளன்மேல்
விளங்கும் விண்டுவிற்
கண்ணனை என்நெடு
வெரிநிற் காண்டியால்.

[எண்ணரும் பெரும் படை– எண்ணுதற்கு அரிய பெரிய வானரசேனை. நண்ணிய பொழுது - வந்து சேரும் போது. அது நடுவண் – அந்தச் சேனையின் நடுவிலே. நங்கை – பெண்களில் சிறந்தவளே. விண்ணுறு – விண்ணிலே பொருந்த. கருளன்மேல் - கருடன் மீது. விளங்கும் விண்டுவின் - விளங்கும் மகா விஷ்ணுவைப் போல. என் நெடு வெரிநில் – எனது பெரிய பிடரியின் மேல். காண்டி – காணப் போகிறாய்.]

ராமபிரானை அனுமன் தோள்மேல் வீற்றிருக்கக் காணும் சீதை, அங்கதன் தோள்மேல லட்சுமணன் விளங்குவதையும் காணப் போகிறாளாம் :

அங்கதன் தோள்மிசை
இளவல், அம்மலை
பொங்குவெங் கதிரெனப்
பொலியப் போர்ப்படை
இங்குவந்(து) இறுக்கும் ; நீ
இடரும் ஐயமும்
சங்கையும் நீங்குதி ;
தனிமை நீங்குவாய்.

[இளவல் – இளையவனாகிய லட்சுமணன். அம்மலை – அந்த உதயகிரி. பொங்கு வெங் கதிரென – விளங்குகின்ற வெப்பமான கிரணங்களையுடைய சூரியன் போல. பொலிய – விளங்க. போர்ப் படை – போருக்குச் சித்தமான வானர சேனை. இங்கு வந்து இறுக்கும் – இந்த இலங்கையிலே வந்து இறங்கித் தங்கும். நீங்குதி – தவிர்வாயாக.



தனிமை நீங்குவாய் – நாயகனைப் பிரிந்து நீ தனித்திருத்தலையும் நீங்கப் பெறுவாய்.]

அனுமனின் முடிவுரை

சிறையிருக்கும் துன்பம் நீங்கும் என்கிறான். 'எனக்கும் மீட்சி உண்டோ?' என்ற ஐயமும் நீங்கும் என்கிறான்.

'மருளும் மன்னவன் வருவானோ, வர மாட்டானோ?' என்ற சங்கையும் நீங்கி விடும் என்கிறான். 'நாயகனைப் பிரிந்த தனிமையும் நீங்கப் பெறுவாய்' என்கிறான்.

இப்படியெல்லாம் கூறி முடித்து விடுகிறானா அனுமன்? அது தானில்லை. இப்படி முடித்துவிட்டால் அனுமன் 'சொல்லின் செல்வன்' ஆகமாட்டானே!

தொடங்கிய பேராற்றலைக் காட்டிலும் பிரமிக்கத் தக்க பெரியதொரு சொல்லாற்றலுடன் முடிப்பதுதான் சிறந்த வாக்கு வன்மையாகும். 'இதை வெல்லும் சொல் வேறொன்றும் இல்லை, இருக்க முடியாது' என்னும் நிலையில் இப் பேச்சை முடிக்கப் போகிறான் அனுமன்.

அது என்ன வார்த்தை?

சீதையின் அவநம்பிக்கையை அடியோடு போக்கக் கூடிய ஒரு வார்த்தை சொல்லப் போகிறான். அப்படி அனுமன் பேசுவானென்று கனவிலும் நினைக்க முடியாத வார்த்தை!

சீதைதான் எதிர்பார்த்திருக்க முடியுமா இந்த வார்த்தையை?

'அம்மா, நீ குறிப்பிட்ட தவணைக்குள் அவன் உன்னைச் சிறையிலிருந்து விடுதலை செய்யவில்லையென்றால்' என்று தொடங்குகிறது அனுமனின் இந்த முடிவுரை. 'இது எப்படி முடியப் போகிறதோ?' என்று நாம் பரபரப்படைகிறோம்.

சீதையும் எவ்வளவு ஆவலோடு, எவ்வளவு பரபரப்புடன் இருந்திருப்பாள்!

'நீ குறித்த தவணைக்குள் அவன் சிறையிலிருந்து உன்னை விடுவிக்க வரவில்லையென்றால், அவனை எவ்வளவு பழியும் பாவமும் பற்றிக் கொள்ளும், தெரியுமா?' என்ற கேள்வியைத் தானே போட்டுக் கொண்டு அதற்குப் பதில் சொல்வது போல் ஒரு வார்த்தை சொல்லி விடுகிறான்.

எவ்வளவு துணிவாக, வாய் கூசாமல் பேசி விடுகிறான்! சீதை செவியில் விழுகிறது; செவி குளிர விழுகிறது!

அந்த நிமிஷத்திலேயே அவநம்பிக்கை விசேஷ நம்பிக்கையாகப் பரிணமித்து விடுகிறது. அந்தப் பழைய அவநம்பிக்கை ஒரு பழங்கதையாய்க் கனவாய்ப் போய் விடுகிறது.

'அவ்விதமாக ராமபக்த சிரேஷ்டனை அனுமன் சொல்வது தகுமா?' என்று பக்தருள்ளம் பதறக் கூடும். அந்தத் துணிவான வார்த்தைதான் என்ன?

சீதைக்கு மனோவியாதியை ஒரே அடியாகப் போக்கி, இனிமேல் சற்றும் மங்காத அறிவுத் தெளிவை உண்டாக்கி விடுகிறதே, அந்த மருந்துதான் என்ன?

அது என்ன, வார்த்தையா, மருந்தா; மந்திரமா?

அனுமன் ஓர் அபூர்வ இலக்கிய சிருஷ்டி. இலக்கிய சிருஷ்டியிலும் ஒரு லட்சிய சிருஷ்டி. வீரன்.

அறிவாற்றல்களைப் பேரன்புப் பெருநெறியிற் செலுத்துகின்றான். இவனுடைய அறிவு அறத்தோடு ஒன்றுபட்டுத் தொழிற் படுகின்றது. சொற்செல்வம் அறத்தோடு அறிவை இரண்டறக் கலந்து கொண்ட உள்ளத்தினின்றும் பொங்குகிறது. உடலாற்றல் இத்தகைய அறிவாற்றலுக்கு அடிமை செய்கிறது.

புறப்பகையை ஒடுக்கும் வீரம் போல் புலனடக்க வீரமும் இந்த லட்சிய வீரனிடம் வரம்பில்லாது காணப்படுகிறது. இவ்வளவுக்கும் மேலாக அனுமனுடைய பக்தியுணர்வு.

ராமபக்தி இவனுடைய ஆற்றல்களுக்கெல்லாம், தர்ம உணர்ச்சிகளுக்கெல்லாம் உள்ளுறை உயிராகி, ராமனது சந்திப்பிற்குப்பின், இவனை ஒரு புத்தப் புதிய அனுமனாக மாறிப் பிறக்கச் செய்திருக்கிறது.

இத்தகைய குணாதிசயத்தை வால்மீகத்திலும் தெளிவாய்க் காண்கிறோம். எனினும், இதிலும் கம்பன் ஒரு புரட்சிகரமான மாறுதல் செய்திருக்கின்றான் என்பதைக் காண்போம்.

சுந்தர ராமாயணம்

கணையாழியும் சூளாமணியும்



பி.ஸ்ரீ

26. ராமன் ராமன் தான் !

'சீதா தேவியே! உம்மை ராமன் விடுவிக்கவில்லையென்றால் அவனைப் பழி பாவங்கள் பற்றிக் கொள்ளும்; அவன் மிகக் கொடியவனாவான்' என்று சொல்வதில் சொல்லின் செல்வனுக்குத் திருப்தி இல்லை. 'எவ்வளவு கொடியவனாவான் தெரியுமா?' என்ற கேள்வியைத் தன் உள்ளத்தில் தானே எழுப்பிக் கொண்டு அதற்கு விடை கூறுவது போல் பேசப் போகிறான்.

ராவண தாசனா?

'ராவணனே நல்லவன் என்று சொல்லும்படி அவ்வளவு பொல்லாதவன் ஆகிவிடுவான்!' என்று சொன்னால் அந்தச் சொல்லும் இந்தச் சொல்லின் செல்வனைத் திருப்தி செய்யப் போவதில்லை.

'நீ குறித்த தவணைக்குள் ராமன் இங்கு வந்து உன்னைச் சிறை மீட்கவில்லையென்றால், அவன் இனி எனக்கு ராமன் அல்லன்!' என்று கூடச் சொல்லத் துணிகிறது அனுமனுள்ளம். அப்படிச் சொன்னாலும் மனச்சான்று திருப்தி சொல்லச் சித்தமாக இல்லை.

'அத்தகைய ராமன இனி எனக்கு ராமன் அல்லன்; ராவணன் தான்!' என்றே சொல்லி விடலாமென்று துணிவு பிறக்கிறது மனத்திற்குள்ளே. ஆனால் உள்ளுக்குள்ளேயிருந்து மனச்சான்று — அந்தராத்மா — மறுபடியும் கேட்கிறது, 'இப்படி நீ சொல்லி விட்டாலும் நான் திருப்தியடையப் போகிறேனா?' என்று.

இவ்வளவு நெருக்கடியில் அனுமனுடைய பண்பட்ட நாவிலிருந்து வெளிப்படும் முடிவுரையைக் கேளுங்கள்:

'சுராவரும் குழலி! இக்
குறித்த நாளினை,
விராவரும் நெடுஞ்சிறை
மீட்கி லான்எனில்,
பராவரும் பழியொடும்
பாவம் பற்றுதற்(கு)
இராவணன் அவன்! இவன்
இராமன்!' என்றனன்.

[சுரா – மருதோன்றி மலர். குழலி – கூந்தலையுடையவளே. இக்குறித்த நாளினை – நீ குறிப்பிட்ட இந்த ஒரு மாத காலத்திற்குள்ளே. விராவரும் – விராவி வரும்; பொருந்தியுள்ள. மீட்கிலான் எனின் – மீட்காமல் போவானேயானால். பராவரும் – சொல்லுதற்கு அரிய.]

இதற்கு மேல் நெஞ்சுத் துணிவும் நாக்குத் துணிவும் இருக்க முடியுமா? 'குறித்த நாளில் அவன் சிறை மீட்காமல இருந்து விட்டால் அவன் ராமன் இல்லை; ராவணன்தான்!' என்கிறான்.

இந்த ஆச்சரியத்திலிருந்து நாம் நம்மை விடுவிப்பதற்குள்ளே, 'அப்போது இந்த ராவணனே ராமனாகி விடுகிறான்!' என்றும் வாய் கூசாமல் சொல்லி முடித்து விடுகிறான் அனுமன்.

இராவணன் அவன்! இவன்
இராமன்!

என்று இப்படி அனுமன் சொல்லி முடிப்பானென்று யார் எதிர் பார்த்திருக்க முடியும்?

'ராவணனே நான் வணங்கத் தக்க ராமனாகி விடுவான்! அப்பால் அடி

யேன் ராவண தாசன்தான்!' என்று பொருள்பட 'இவன் இராமன்! என்று ராவணனுடைய அரண்மனை இருந்த திசையைச் சுட்டிக் காட்டுவது போல் அல்லவா தோன்றுகிறது?



அந்தகாரத்தில் நந்தாவிளக்கு

இவ்விதமாக ராம பக்த சிரேஷ்டனை அனுமன் சொன்னது பக்திக்குப் பொருந்துமா? ஆம்; அனுமனுக்கு ராம பக்தி என்பது தருமத்திலுள்ள பக்திதான். ராமனைக் கண்டதும் தருமத்திற்கு ஓர் உருவமும் உண்டு என்று கண்டு கொண்டான்.

தருமத்தின் அழகுருவமே ராமன் என்று மோகித்தது இந்தப் பிரம்மச்சாரி-உள்ளம். எனவே தருமமில்லாதது ராமனாக இருக்க முடியுமா? அதர்ம சிகரம் ஸம்ஹரிக்கத் தக்க ராவணனாகத் தானே இருக்க முடியும்?

இன்னும் சற்றுக் கூர்ந்து பார்ப்போம், இந்த ஆச்சரியமான அனுமனுள்ளத்தை. ராமன் எவ்வளவு உயர்ந்த தரும மூர்த்தியாக இருந்தாலும், சீதையைச் சிறைமீட்காத பாவம் ஒன்றே அவனை அந்தச் சிகரத்திலிருந்து தள்ளி விடுமாம்; கீழே அதல பாதாளத்தில் தள்ளி ராவணனுக்கியும் விடுமாம்.

அதே சமயத்தில், அது (அந்த ராம விழ்ச்சியே) ராவணனையும் ராமனுக்கி விடுமாம். அப்படி ராமனுவதற்கு இந்தப் பாபாத்மா ஒரு புண்ணியமும் செய்ய வேண்யடிதில்லை; வழக்கம் போல் இருக்கலாம்! ஆம்; வழக்கம் போல் பாவம் செய்து கொண்டேயிருக்கலாம்!

உண்மையில், ராம ராவணர்கள் லட்சிய புருஷர்களே. அவன், புகழுக்கும் புண்ணியத்துக்கும் லட்சியம்; இவன், பழியோடு பாவத்துக்கு லட்சியம்.

இத்தகைய மனப்பான்மையுள்ள அனுமன், குறித்த நாளில் நெடுஞ் சிறை மீட்கவில்லையென்றால் பழியோடு பாவம் பற்றுதற்கு,

இராவணன் அவன்

என்று சொல்லிவிட்டு, அதே மூச்சில் 'இவன் இராமன்!' என்றும் சொல்லி முடித்தது சீதை செவியில் விழுகிறது.

ராமதாசன் வாயிலிருந்து வருகிறது. ராம பத்தினியின் செவியில் விழுகிறது. ஆம்: வாய் குளிர வந்து, செவி குளிரப் புகுந்து, நெஞ்சு குளிர விழுகிறது. அந்தக் கணத்திலேயே சீதையின் அவநம்பிக்கை விசேஷ நம்பிக்கையாக — மகா விசுவாசமாக—பரிணமித்துவிடுகிறது.

ஆச்சரியமான பாட்டு இது, 'அலங்காரமில்லாத உண்மை' என்றாலும் போதாது. 'ஆடையும் இல்லாத உண்மை!' என்று தான் சொல்ல வேண்டும்.

கவிஞன் உள்ளத்திலே—சித்தாகாசத்திலே — மின்னலாக நீண்டு நிமிர்ந்து கர்ஜித்து ஓட முயன்ற உண்மையைத் தான் இந்தச் செய்யுளின் இறுதி அடியில் சிறை செய்த முடங்கிக் கிடக்கச் செய்து விட்டான் கவிஞன்.

இராவணன் அவன்! இவன்
இராமன்!

என்றதும் இதற்கு மேல் சொல்ல வேண்டியிருக்கிறது ஒன்றுமே இல்லையென்று தான், 'என்றனன்' என்று அப்படியே பளிச்சென்று முடித்து விடுகிறான்.

இந்த இறுதி அடிதான் இந்தச் செய்யுளுக்கே முதன்மையாக — முதன் முதலாக—கவிஞனது உள்ளொளியாய்ச் சித்தாகாசத்தின மின்னொளியாய்த் தோன்றியிருக்க வேண்டும். இது கல்லாக் கலையறிவு. புலமையறிவு முதல் மூன்று அடிகளையும் தோற்றுவித்துச் செய்யுளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

ராமபக்தனை அனுமன் சொன்ன வார்த்தையைக் 'குற்றமற்ற வார்த்தை' யென்றே ராமபக்தனை கவிஞன் கருதுகிருன்; சீதையும் அப்படியே நினைக்கிருள்.



குணமென்னும் குன்றேறித் தரும சிகரத்தையே கண்டு அங்கே நின்று அனுமன் பேசிய இந்த மந்திர வார்த்தை தான் சீதைக்கு மனோ வியாதியைப் போக்கி அறிவுத் தெளிவை உண்டாக்குகிறது :

ஆக இம்மொழி
ஆசில கேட்டறி
வுற்ருள்;
ஓகை கொண்டுக-
ளிக்கும் மனத்தளு-
யர்ந்தாள் ;
போகை நன்றிவன்
என்பது புந்தியின்
வைத்தாள் ;
தோகை யும்சில
வாசகம் இன்னன
சொன்னுள்.

[ஆக – இவ்வாருக. ஆசு இல – குற்றமில்லாத, அறிவுற்ருள் – அறிவு தெளிந்தவளாய். ஓகை – உவகை. உயர்ந்தாள்–(இங்கே) நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள். இவன் போகை நன்று— இந்த அனுமன் (விரைவில்) ராமனிடம் திரும்பிப் போவதே நல்லது. புந்தி – புத்தி. வைத்தாள் – வைத்துக் கொண்டவளாய். தோகை – மயில் போலும் சாயலை யுடைய சீதை. வாசகம் – வார்த்தைகள். இன்னன — இப்படிப் பட்ட.]

அனுமன் கடைசியாகச் சொன்ன வார்த்தையைக் கேட்டதும் சீதைக்கு அது அந்தகாரத்திலே ஒரு நந்தா விளக்கைப் போலத் தோன்றியது.

இருளும் ஞாலம்
இராவணனால், இது
தெருளும்

என்று அனுமன் சொன்னபோது தெளிவுருத உள்ளம் இப்போது தெளிவு பெற்றது. தன்னுடைய ஞாபக சக்தியை ஏதோ ஒரு மேகம் மறைத்திருந்தது போலவும், அந்த வானம் இப்போது தெளிவுற்றது போலவும் தோன்றியது. அந்த அதிசயமான கண்களிலே ராம பத்தினிக்கு உரிய பரம விசுவாசம் ஒளி வீசியது : தரும வீரம் மின்வெட்டியது.

சீதை அறிவுற்று உவகை கொண்டாள், அந்த மகிழ்ச்சி வெறியிலே உயர்ந்து விட்டாள்: நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

அடையாள வார்த்தை

'இனி இவனை அனுப்பி விடவேண்டும்' என்று தீர்மானித்து, விடைகொடுக்கும் நோக்கத்துடன் தானும் சில அடையாள மொழிகளை ராமனிடம் விண்ணப்பிக்கும்படி சொல்கிறாள்:

'சேறி ஐய! வி-
ரைந்தனை; தீயவை
எல்லாம்
வேறி; யான்இனி
ஒன்றும் விளம்பலென்:
மேலோய்!
கூறு கின்றன,
முன்குறி உற்றன,
கோமாற்(கு)
ஏறும் என்றவை
சொல்'லென இன்ன
இசைப்பாள்.

[சேறி ஐய விரைந்தனை — ஐயனே இங்கிருந்து விரைந்து செல்வாயாக. தீயவை எல்லாம் வேறி — இடையே குறுக்கிடும் தீமைகளை யெல்லாம் வெல்வாயாக. யான் இனி ஒன்றும் விளம்பலென் — இப்பொழுது நான் அதிகமாய் வேறொன்றும் சொல்லப் போகிறதில்லை. மேலோய் — பெரியவனே. கூறுகின்றன — நான் இப்பொழுது சொல்லுகின்றனவும். முன் குறி உற்றன — முன்னே நிகழ்ந்தனவுமாகிய அடையாளங்கள். கோமாற்கு ஏறும் — என் தலைவனாகிய ராமனுக்குச் சம்மதமாகும். என்று அவை சொல்— என்ற காரணத்தால் அவற்றை அவனிடம் தெரிவிப்பாய். என இன்ன இசைப்பாள்—என்று இந்த வார்த்தைகளைச் சொல்பவளானாள்.]

இந்தப் பீடிகையுடன் சீதை வால்மீகி விவரிக்கும் காகாசுர வரலாற்றைக் குறிப்பிடுகிறாள்:

நாகம் ஒன்றிய
நல்வரை யின்தலை
மேனாள்,
ஆகம் வந்தெனை
அள்ளுகிர் வாளின்
அளைந்த
காகம் ஒன்றை
முனிந்(து), அயல் கல்எழு
புல்லால்
வேக வெம்படை
விட்டது, மெல்ல
விரிப்பாய்.

[நாகம் ஒன்றிய— மேலுலகத்தை அளாவிய; அதாவது மிக உயர்ந்த. நல்வரையின் தலை—அழகிய மலையிலே, அதாவது சித்திரகூட மலையில். மேல் நாள் - முன்னாளில். அதாவது வனவாசம் செய்யத் தொடங்கிய காலத்தில். ஆகம் வந்து எனை - என் மார்பிற்கு அருகில் வந்து என்னை. அள் உகிர் வாளின் — கூர்மையான வாள் போன்ற தன்னுடைய நகத்தினால். அளைந்த காகம் ஒன்றை-குத்தின காக்கை ஒன்றை. முனிந்து- கோபித்து. அயல் கல் எழு புல்லால் — அருகில் கல்லிடையே முளைத்த புல்லைக் கொண்டு. வேக வெம்படை — வேகமும் வெப்பமும் உள்ள அஸ்திரமாக்கி. விட்டது — ராமன் பிரயோகித்ததை. மெல்ல விரிப்பாய் — நான் சொன்ன அடையாளமாக மெல்லச் சொல்வாய்.]

இந்தச் செய்யுளில் கூறியுள்ள காகாசுரன் வரலாற்றுடன் திருப்தி யடையாமல் இதற்கு மேல் ஐந்து செய்யுள்கள் இந்த வரலாற்றை விவரிக்குமாறு சேர்க்கப்பட்டுள்ளன. இவை முக்கியமான ஏட்டுப் பிரதிகளில் இல்லை யென்பதைக் கம்பராமாயணப் புலவர்கள் அறிவர்.

'மேல் ஐந்து செய்யுள்கள் சில பிரதிகளில் இல்லை' என்று பெரும் புலவரான ஸ்ரீ வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியரும் கூறியுள்ளார்.

இத்தகைய இடைச் செருகல்கள் ரஸிகருள்ளத்தைப் புண்ணுக்குகின்றன. ஓர் அழகுக் களஞ்சியமான சித்திரத்திலே குறைவும் குறைதான். மிகையும் குறைதான். ஒரு தக்க ஆராய்ச்சிப் பதிப்பு வரும்போதுதான் இந்தத் துர்ப்பாக்கிய நிலை நீங்கி ரஸிகருள்ளம் திருப்தி யடையும்.

*   *   *

இனி வேறொரு அடையாளமும் சீதை சொல்லுகிறாள். சீதா ராமர்களின் பழைய ஆனந்தமான வாழ்க்கைக் காட்சிகளில் ஒன்றைச் சொல்லுகிறாள். இது கிளியைப் பற்றிய ஒரு செய்தி. இது குறித்து அடுத்த வாரம் பார்க்கலாம்.



27. கிளியும் மணியும்

சீதையின் கிளியைப் பற்றி நாம் ஏற்கெனவே கேள்விப் பட்டிருக்கிறோம். சீதை கணவனோடு காட்டுக்குப் புறப்பட்ட போது ஏதோ ஒரு பெரிய வெற்றி யடைந்து விட்டது போல ஒரு புன்னகையுடன்தான் காணப்பட்டாள். செல்வம் துறந்து மரவுரி கட்டிச்செல்லும்போது ஸாக்ஷாத் மகாலட்சுமி போல அவ்வளவு செல்வப் பெருமிதப் பொலிவு முகத்திலும் கண்களிலும் ததும்பத் தன் செல்வனைத் தொடர்ந்து சென்றாள். இந்த மனப்பான்மையுடன், காட்டில் அடி யெடுத்து வைக்கப் போகும் தருணத்தில் சுமந்திரன் ஒரு செய்தி கேட்கச் சீதை சொல்லி அனுப்பி வைத்தாளல்லவா? கிளியைப் பற்றிய செய்தி தான்.

பொன்னிறக் கிளி ஒன்று வளர்த்து வந்தாள் அரண்மனையிலே. 'அந்தக் கிளிக்கு வேளை தப்பாமல் உணவு கொடுக்க வேணும்; பேச்சுக் கற்றுக் கொடுக்க வேணும்' என்று தான் தங்கையருக்குச் செய்தி சொல்லி யனுப்பினாள்?

அந்த ஒரு கவலையைக் கொண்டு சீதையின் பொன்னான உள்ளத்தை 'இதோ பார்' என்று காட்டி வைத்தான் கவிஞன்.

மூன்று இடங்களில் கிளி

இந்தப் பொன்னுள்ளம் சுமந்திரனை அழச் செய்துவிட்டது. குழந்தை போல விம்மினான், சீதையின் குழந்தை யுள்ளம் கண்டு.

அந்தக் காட்சியை யாரால் மறக்க முடியும்? அதைத்தான் ராமன் ஓர் அடை





யாளமாக அனுமனிடம் சொல்லியனுப்பியிருந்தான்.

அதே கிளியைக் குறிக்கும் வேறொரு விஷயத்தைச் சீதையும் இப்போது அடையாளமாக அனுமனிடம் சொல்லுகிறாள். அப்போது சீதை சொன்னதிலிருந்தும், பிறகு ராமன் சொன்னதிலிருந்தும், சீதை அரண்மனையில் சில நாகணவாய்ப் பறவைகளான மைனாக்களோடு கிளியும் வளர்த்து வந்ததாகத் தெரிய வருகிறது.

கிளிப் பிள்ளைக்காகச் செய்தி சொல்லியனுப்பிய சீதையையும் 'பிள்ளை' என்று ராமன் குறிப்பிட்டதாக அனுமன் சீதையிடம் தெரிவித்தான். 'கிளிப் பிள்ளைக்காகக் கவலைப்பட்ட கிளிப் பிள்ளை' என்பது போல் ஒரு பாவம் தொனிக்கிறதல்லவா? அது குறித்துச் சீதைக்குக் கவலையில்லை; பெருமை தான்; குதூகலம்தான்.

அந்தக் கிளிப் பிள்ளையின் அருமை இவளுக்குத் தானே தெரியும்? அதைத் தன் உயிராக மதித்து வளர்த்து வந்தாள். பாலூட்டிச் சீராட்டிப் பரிபாலித்து வந்தாள். (இதனால் தானே காட்டுக்குப் போகும் போது அந்தக் கிளியைப் பற்றியே கவலை?)

கிளியா கைகேயி?

சரி, அதன் பெயர் தெரியுமா? அந்தக் கிளிக்குக் **கைகேயி** என்றுபெயர். திகைத்

துப் போகிறீர்களல்லவா? வஞ்சித்துக் காட்டுக்கு அனுப்பிய கொடியவளின் பெயர் சீதையின் ஆசைக் கிளிக்கு எப்படிக் கிடைத்தது?

இந்த அதிசயத்தைச் சீதையின் வாய் மொழியாகவே கேட்டுப் பார்க்கலாம்:

'என்னோர் இன்னுயிர்
மென்கிளிக்(கு) யார்பெயர்
ஈகேன்,
மன்ன?' என்றலும்,
'மாசறு கைகயன்
மா(து)என்
அன்னை தன்பெய-
ராகென அன்பினொ(டு)
அந்நாள்
சொன்ன மெய்ம்மொழி
சொல்லுதி, மெய்ம்மை
தொடர்ந்தோய்!'

[ஓர் – ஒப்பற்ற. ஈகேன் – ஈவேன்; கொடுப்பேன்; இடுவேன். மன்ன – அரசனே; நாயகனே. மாசு அறு–குற்றமற்ற. கைகயன் மாது – கைகேயி. ஆக என – ஆக என்று. மெய்ம்மொழி – மெய்ம்மையான வார்த்தை; மனப்பூர்வமான வார்த்தை. சொல்லுதி – சொல்வாய். மெய்ம்மை தொடர்ந்தோய் – உண்மை நெறியை அனுஷ்டிக்கும் அனுமனே.]

நாட்டில் இருந்த காலம். துன்பம் இன்னதென்று தெரியாத காலம். சீதையும் ராமனும் உல்லாஸமாக உரையாடிக் கொண்டிருக்கிறார்கள். சீதையின் அன்புக் கிளி வருகிறது, கொஞ்சுகிறது, போகிறது.

கொஞ்சும் குரலில் சீதை கேட்கிறாள், ராமனை நோக்கி—' அன்ப, என் அன்புக் கிளிக்கு யார் பெயரை இட்டழைப்பது உமக்கு உவப்பாயிருக்கும்?' என்று.

பளிச்சென்று ராமன் பதில் சொல்லுகிறான்: ' என் தாயான கைகேயி பெயரால் அழைப்பது தான் எனக்குத் திருப்தி. ஆஹா, என்ன அன்பு நிறைந்த மாசற்ற உள்ளம்!'

குணாதிசயப் போட்டி

எவ்வளவு நம்பிக்கையோடு, எவ்வளவு உண்மையாகப் பேசினான் அன்பன்! – என்பது இப்போது அப்படியே பிரத்தியட்சமாகிறது. அந்த நிகழ்ச்சியே சிறந்த அடையாளமாயிருக்கும் என்று சீதை நினைக்கிறாள்.

ராமன் சொல்லியனுப்பிய அடையாளமும், கிளிக்குக் கைகேயி பெயரிடச் சொன்ன அதே மாசற்ற குணாதிசயத்தை வெளியிடுகிறது. இப்போது சீதை சொன்ன அடையாளமும், இவள் காட்டில் சுமந்திரனிடம் கிளியைப் பற்றிக் கவலை தெரிவித்த அதே குழந்தையுள்ளத்தை வெளியிடுகிறது.



அனுமனும் ஏங்கினன் !

இனி அடையாளங்களுக் கெல்லாம் மேலான அடையாளம் ஒன்றே ஒன்று தான். ஆடையில் முடித்து வைத்திருந்த ஏதோ ஒன்றைத் தன் மலர்க்கைகளில் எடுக்கிருள்.

என்று ரைத்(து) இனி(து)
இத்தனை பேரடை—
யாளம்
ஒன்று ணர்த்துவ(து)
இல்லென எண்ணி
உணர்ந்தாள்,
தன்தி ருத்துகி—
லிற்பொதி வுற்றது,
தானே
வென்ற(து) அச்சுடர்
மேலொடு கிழுற
மெய்யால் !

[என்று – என்று இவ்விதமாக அடையாள மொழிகளை அனுமனிடம் சொல்லி விட்டு. இனிது இத்தனை பேரடையாளம் உரைத்து – இனிமையாக இவ்வளவு சிறந்த அடையாளங்களைச் சொன்ன பின்பு. ஒன்று உணர்த்துவது இல்லென எண்ணி உணர்ந்தாள் – இனி அடையாள வார்த்தையாக ஒன்றும் சொல்லி யனுப்ப வேண்டுவதில்லை யென்பதை எண்ணி உணர்ந்தவளாய். தன் திருத்துகிலில் பொதிவுற்றது – தன் அழகிய ஆடையில் முடியப் பெற்றுள்ளதும். தானே வென்றது அச்சுடர் மேலொடு கீழுற மெய்யால்–தன் வடிவத்தால் மேலுங் கிழும் பொருந்தி விளங்கிச் சுடர்களை யெல்லாம் தான் ஒன்றே வென்றது மாகிய.]

'இது என்னவோ?' என்று அனுமனே ஒரு கணம் ஏங்கிப் போகிறுன்.

அனுமனுக்குத் தான் இப்போது என்ன திகைப்பு! அந்த இரவிலே, அந்தச் சோலையிலே எப்படியோ சூரியோதயமே ஆகிவிட்டது போல் ஒரு மயக்கம்! சுற்றிலும் இருட்டு அப்படி நிலைகுலைந்து ஓடுகிறது!

அனுமனுடைய அந்தத் திகைப்புடனும் பூரிப்புடனும் சீதையின் மலர்க்கையிலுள்ள அந்தப் பொருளை நோக்குவோம்:

வாங்கி னுள்தன்
மலர்க்கையின் அன்னது ;
முன்னு
எங்கி னுன்அவ்
அனுமனும், 'என்கொல்
(இது)?'
என்னு,
விங்கி னுன்,வியந்—
தான் ; உலகேழும்
விழுங்கித்
தூங்கு காரிருள்
முற்றும் இரிந்தது
சுற்றும் !

[வாங்கினுள் – எடுத்தாள். அன்னது – அந்தச் சூடாமணியை. முன்னு – முன்னி; எண்ணி. ஏங்கினன் – ஏங்கித் தயங்கிப் போனவனுய். என் கொல் – என்ன. என்னு – என்று எண்ணி. வீங்கினுன் – உடல் பூரித்தவனுய். தூங்கு – தங்குகிற. கார் இருள் – கரிய இருள். முற்றும் – முழுவதும். இரிந்தது – நிலைகுலைந்து ஓடிப்போய் விட்டது. சுற்றும் – சுற்றிலும்.]

காட்டினள்...கண்டான்

இந்த மேனிக்கும் இந்த இரத்தினத்திற்கும் தான் எவ்வளவு பொருத்தம் ! கூந்தலாகிய மழைமேகத்தில் ஒளி வீசிய அந்தச் சிவந்த இரத்தினம் ராமபிரானது சிவந்த அடிமலர்களையும் நினைப்பூட்டுகிறது.

சீதை காட்ட அனுமன் காண்கிறுன் :

கூந்தல் மென்மழை
கொள்முகில் மேல்எழு
கோளின்
வேந்தன் அன்னது,
மெல்லியல் தன்எழில்
மேனி
சேந்த(து), அந்தமில்
சேவகன் சேவடி
என்னக்
காந்து கின்றது
காட்டினள்; மாருதி
கண்டான்.

[கூந்தல் மென்மழை கொள் முகில் மேல் – மெல்லிய கூந்தலாகிய மழை கொண்ட மேகத்தின் மேலே. எழு கோளின் வேந்தன் அன்னது – உதய

மாகின்ற,நவக்கிரகங்களின் தலைவனுகிய, சூரியனை ஒத்திருப்பதும். மெல்லியல் தன் — மென்மையான தன்மையுள்ள சீதையின். எழில் மேனி சேந்தது — அழகிய மேனி போலச் சிவந்திருப்ப தும். அந்தமில் சேவகன் — எல்லையில்லாத வீரமுள்ள ராமனது. சேவடி என்ன — சிவந்த திருவடிகள் போல. காந்துகின்றது — (இருள் போக்கி) ஒளிர்கின்றதுமாகிய அம்மணியை. மாருதி — அனுமன்.]

வானரர் கூட்டத்தின் நடுவில் விழும்படி தன் அணிகளை யெல்லாம் ஒரு சீலையில் முடிந்து எறிந்தாளல்லவா? சூடாமணி மட்டும் அப்படி எறியப்படாமல் ஆடையிலேயே தங்கியிருந்ததாம். சமயத்தில் பயன்படுமென்று முடித்து வைத்திருந்தாள்.

கொடுத்த சம்மானம்

அப்படிப் பட்ட சூடாமணியைச் சீதை இப்போது அனுமனிடம் கொடுப்பதைப் பார்க்கிறோம்:

'சூடை யின்மணி
கண்மணி ஒப்பது,
தொன்னுள்

ஆடை யின்கண்
இருந்தது, பேர்அடை—
யாளம்;

' நாடி வந்தெனை(து)
இன்னுயிர் நல்கிய
நம்பா!

கோடி!' என்றுகொ—
டுத்தனள் மெய்ப்புகழ்
கொண்டாள்,

[தொன்னுள் — ராவணன் தன்னை எடுத்து வந்த காலந் தொட்டு. நம்பா— புருஷோத்தமனே. கோடி—கொடுப்பாயாக.]

சூடாமணியை அனுமன் உடனே வாங்கிக் கொள்ள வில்லை:

தொழுது வாங்கினன்,
சுற்றிய தூசினன்;
சுற்றிப்

பழுது றுவகை
பந்தனை செய்தனன்;
பந்தித்(து),

அழுது மும்மை
வலங்கொ(டு) இறைஞ்சினன்;
அன்போ(டு)

எழுது பாவையும்
ஏத்தினள்; ஏகினன்
இப்பால்.

[தூசு — ஆடை. உறு வகை—உண்டாகாதபடி. பந்தனை — கட்டுதல். ஏத்தினள் — துதித்தாள்; தொழுதாள்.]

அனுமனின் இந்த அழுகைக்கு ஒரு **மகா பாஷ்யமே** வேண்டியதுதான் — யாரால் முடியும்? எந்தச் சொல்லின் செல்வனுல் முடியும்?

அழுது கொண்டே மூன்று தடவை பிரதட்சிணம் செய்வதும், மறுபடியும் காலில் விழுந்து வணங்குவதும், இருவரும் ஒன்றுமே பேசத் தெரியாமல் அப்படியே இருப்பதும், மகா நிபுணன் ஒருவன் பரிபூர்ண அன்போடு சித்திரித்த பிரதிமை போல் சீதை காணப்படுவதும், கடைசியாகச் சீதையும் கை கூப்பித் தொழுவதும், தாங்க முடியாத உணர்ச்சிகளுடன் அப்படியே அனுமன் அந்த இடத்தை விட்டு உடனே புறப்படுவதும், சூடாமணிப் படலத்தின் இந்த இறுதிப் பாட்டிலே நாம் காணும் கம்ப நாடகம்.



"நான் இரவல் கொடுத்தே பாதிப் புஸ்தகங்களைத் தொலைத்து விட்டேன், ஸார்!"

"நான் இரவல் வாங்கியே பாதிப் புஸ்தகங்களைச் சேர்த்துட்டேன், ஸார்!"



28. கோர தாண்டவம்

குதூகலத்தில் பொதிந்துள்ள சக்தியைத் தான் என்னென்பது? சிரமம் தோன்றாமல் செயற்கருஞ் செயல்களையும் செய்து முடிக்கும் பேராற்றல் குதூகலத்திற்குள்ளே அணுவுக்குள் சக்தி போல் பதுங்கிக் கிடக்கிறது.

சீதையைக் கண்டதும், கணையாழி காட்டியதும், சூடாமணி வாங்கியதும் எவ்வளவு உத்ஸாகத்தை அனுமனுள்ளத்திலே பொங்கச் செய்திருக்க வேண்டும்!

அந்த உத்ஸாகத்திலே வடக்கு நோக்கினான், ராமனிருந்த அந்தத் திசையில் போய்க் குதித்து விட வேண்டுமென்று தான். அந்தப் பூரிப்பிலேயே நிமிர்ந்து விட்டான். அந்த நிமிர்ந்த நிலையிலேயே பெருங் குணத்திற்கும் பேராற்றலுக்கும் ஏற்ற பேருருவம் பொருந்தி விட்டதாம்.

ஆலோசனை — மின்னல்கள்

அப்போது அசோக வனிகை நடுவாகத் திரும்பிப் போய்க் கொண்டிருந்தான். திடீரென்று ஓர் ஆலோசனை மின் வெட்டியது மனவெளியிலே.

பூத்துச் சொரிந்து கொண்டிருக்கும் அந்த அழகிய பெருஞ் சோலையை அப்படியே அழித்துவிட வேண்டுமென்பதுதான் அந்த ஆலோசனை!

குதூகலத்திலே பிறந்த ஆலோசனைதான். அந்த ஆலோசனையை நிறைவேற்றுவதற்கு உரிய பேராற்றலுக்கும் தூண்டுகோல் குதூகலம்தான்.

இயற்கையழகைக் கண்ணுற்று அதனால் ஒரு துஷ்டனுக்கு விளைந்த குதூகலத்தைக் குறித்துப் பாடுகிறான் ஓர் ஆங்கில கவி, 'அந்தக் கடற்கொள்ளைக்காரனின் குதூகலம் தீமைதான்!' என்கிறான். அனுமனோ,

'சிறுத்தொழில் முடித்(து) அகறல்
தீதெ'னல் தெரிந்தான்

[சிறுத்தொழில் — சிறு தொழில். அகறல் — திரும்பிச் செல்லுதல்.]

என்பது கம்பன் பாட்டு.

சீதையைக் கண்டு பேசியதும், அவளது தற்கொலை—முயற்சியைத் தடுத்துக் கணையாழி காட்டிச் சூடாமணி வாங்கியதும் எல்லாம் சிறு தொழிலாகவே தோன்றுகிறது, இப்போது அனுமனுக்கு.

'இந்தச் சிறு தொழிலுடன் திரும்பி விடுவது தீது' என்று கருதுகின்ற இந்த மனநிலையைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். தன் பேராண்மைக்கு இழுக்கு என்று நினைத்ததாகத்தான் சாதாரணமாய்ப் பொருள் கூறுகிறார்கள். அவ்வளவு தானா? நாம் சற்றுப் பொறுத்துப் பார்க்கலாமே.

தன் ஆண்மையை எதிரிகள் மதிக்குமாறு ஒரு பெருஞ் செயலைச் செய்து திரும்புவதே தகுதி என்று அனுமன் கருதிச் சீதை சிறையிருக்கும்

அசோக வனிகையை அழிக்கப் புகுந்தான் என்று தான் வாசகர்கள் பொதுவாக நினைக்கக்கூடும். இனி, அனுமனுடைய ஆலோசனையைத் தெரிவிக்கும் ஆறு கவிகளைப் படித்துப் பார்ப்போம்.

பகைவர்கள் பரம துஷ்டர்கள்; இழி தொழில்களில் நிபுணர்கள். இத்தகைய அரக்கர்களைக் கொல்வதில் துளிகூடப் பாவமில்லை. 'கூடுமானால் இந்தத் துஷ்டர்களுடைய இருப்பிடத்தையும் அழித்து விடலாம். பிறகு சீதாபிராட்டியை ராமபிரானது திருவடிகளில் கொண்டு சேர்த்து விட்டால்தான் நான் ராமனுக்கு அடியவனாக இருக்க முடியும்' என்று இவ்வாறு ஓடுகிறது ஆலோசனை.

ஆனால், பிராட்டியையாவது, தான் சிறை மீட்டுக் கொடுப்பதாவது! சிதை விலக்கிய செயலல்லவா? ராமனது பெருமைக்கு இழுக்கல்லவா? எனவே அந்த ஆலோசனை-வேகத்தைச் சற்று மட்டுப் படுத்திக் கொள்கிறான்.

சீதையை வஞ்சித்துச் சிறை வைத்த அரக்கனைத் தான் சிறை வைத்துப் பார்க்க வேண்டுமென்று ஆலோசனை பிறக்கிறது; ஆசை துடிக்கிறது. இந்த வேகம் தான் கொஞ்சமோ?

கம்பனுடைய செய்யுள் நடையே தெரிவிக்கிறது அனுமனது ஆலோசனைக் கடுப்பையும் துடிப்பையும்:

வஞ்சனை அரக்கனை
நெருக்கிநெடு வாலால்
அஞ்சினுடன் அஞ்சுதலை,
தோளுற
அசைத்தே
வெஞ்சிறையில்
வைத்துமிலென்;
வென்றுமிலென்...

[அஞ்சினுடன் அஞ்சு தலை தோள் - பத்துத் தலைகளும் (இருபது) தோள்களும். உற அசைத்தே - ஒன்று சேரும்படி சேர்த்துக் கட்டி. வெஞ்சிறையில் - கொடிய சிறையில். வைத்தும் இலென் - வைத்தலும் செய்தேனில்லை. வென்றும்இலென் - வெல்வதும் செய்தேனில்லை.)

'இவ்விரண்டில் ஏதேனும் செய்யாது திரும்பிச் செல்வது தகுதியா, தருமமா?' என்று அனுமன் தன்னைத் தானே கேட்டுக் கொள்கிறான். இந்த ஆலோசனை-வேகம் அதிகரிக்கிறது.

ராட்சஸக் கடலை ஒரு கலக்குக் கலக்கி விடாமல் தென்கடலை மீண்டும் தாண்டிச் செல்வது போதுமா?—என்கிறது வீர நெஞ்சு. சீதையைச் சிறை வைத்த ராவணனைத் தான் சிறை வைத்துப் பார்ப்பதும் போதாது எனத் தோன்றுகிறது, பழிக்குப் பழி வாங்க உத்தேசிக்கும் உள்ளத்திற்கு.

'ராவணன் கண்ணெதிரே அவனது பட்டமகிஷியின் மலர்க் குழல் பிடித்திழுத்து அவளையும் சிறை வைத்துப் பார்ப்பதுகூடத் தகுதியென்றும், தருமமென்றும் தோன்றுகிறது'. இந்தக் கோபாவேசமே தருமாவேசம் என்று படுகிறது.

இந்தக் கோபத்தின் உச்சி வெய்யில் சற்றுத் தணிவது போலக் காண்கிறது. ராம பத்தினியைக் கவர்ந்து ராவணன் சிறை வைத்தது பெருங்குற்றமென்றால், ராவண பத்தினியை அனுமன் கொண்டு வந்து சிறை வைப்பது தருமமாகுமா? ஒரு பெருங் குற்றத்திற்கு வேறொரு பெருங் குற்றம் சமானமாகலாம், சமாதானமாகி விடுமா?



சொல்லிப் போக வேண்டுமல்லவா? வேறு எந்த உபாயத்தாலும் ராவணேச்வரனைக் கண்டு கொள்ள இயலாதல்லவா?

சரி; அரக்கர்களைப் போரில் மூட்டுவது சரியான உபாயம் தான். ஆனால் அவர்கள் போரிட வந்து சேரவேணுமே? எனவே உபாயத்திற்கும் வேறொரு உபாயம் வேண்டும்!

அந்த உபாயம் தான் அசோக வனத்தை அழிப்பது. அரக்கர் கோனுக்குக் கண்ணான இந்தச் சோலையை அழிப்பதே அரக்கர்களைப் போருக்கு இழுப்பதாகும்; அரக்கர் கோனையும் அழைப்பதாகும். இல்லாவிட்டால் ஸாக்ஷாத் ராவண தரிசனம் குரங்குக்குக் கிடைக்குமா? ஆலோசனை எப்படி?

அனுமனே சொல்லட்டும் தன்னுடைய இந்த உபாயத்தை:

இப்பொழி லினைக்கடி (து)
இறுக்குவென்; இறுத்தால்,
அப்பெரிய பூசல் செவி
சார்தலும், அரக்கர்
வெப்புறு சினத்தர், எதிர்
மேல் வருவர்; வந்தால்,
துப்புற முருக்கி, உயிர்
உண்பல்; இது சூதால்.

[இப்பொழிலினை — இந்தச் சோலையை. கடிது இறுக்குவென் — விரைவில் முறித்தழிப்பேன். அப்பெரிய பூசல் — அந்தப் பேரொலி. செவி சார்தலும் — காதிற் பட்டதும். வெப்புறு சினத்தர் — வெப்பம் மிக்க சினம் உடையவராய். எதிர் மேல் வருவர் — எதிர்த்து என் மேல் போருக்கு வருவார்கள். துப்புற — (என்) வலிமை பொருந்த. முருக்கி — அழித்து. உயிர் உண்பல் — உயிரை உண்டு விடுவேன். இது சூதால் — இது சூது.]



ராமனுடைய வலிமைச் சிறப்பை வெளிப்படுத்தாமல் போவது தகுதியில்லை யென்று தான் இப்போது தோன்றுகிறது. மேலும், ராவணனையோ ராவணபத்தினியையோ சிறை வைப்பதுதான் எளிதான காரியமா? இதையும் அனுமனின் பேரறிவு ஊகித்திருக்கக் கூடியது தானே?

அனுமன் துணிவு

'வேறு வகையாக ஆலோசனையை நீள விட்டுக் கொண்டே யிருப்பதில் பயனில்லை; அரக்கர்களைப் போருக்கு இழுப்பதே போதும்' என்று முடிவு செய்கிறான் அனுமன்.

அரக்கர்களை அழிக்க முயன்றால், அரக்கர் கோனும் தன் கண்ணுக்கு எதிரே வந்து சேருவான் என்பது அனுமன் கருத்து. எப்படியாவது தூதன் செய்தி

சூது பலித்து ராவணனும் தோன்றி விடுவான் என்று நினைக்கும்போதே, தூது வந்த செய்தியை மட்டும் சொல்வது மீண்டும் 'சிறு தொழில்' என்றே தோன்றுகிறது. ராவணனை நினைத்துப் பார்த்ததுமே, சிந்தையில் பொதிந்துள்ள வெந்துயரம் ஆருக்கனலாகப் பொங்குகிறது.

இந்த மனநிலையையும் இதோ தெரிந்து கொள்ளுங்கள்:

வந்நவர்கள் வந்தவர்கள்
மீள்கிலர் மடிந்நால்,

வெந்திறல் அரக்கனும்
விலக்கரு வலத்தால்

முந்தும்; எனில் அன்னவன்
முடித்தலை முடித்(து) என்

சிந்தையுறு வெந்துயர்
தவிர்த்(து)இனிது செல்வேன்.

[மீள்கிலர் மடிந்தால் — மீண்டு போகாது மாண்டொழிந்தால். வெந்திறல் அரக்கனும் – கொடிய அரக்கர் கோனும். விலக்கரு வலத்தால் – எவராலும் விலக்க முடியாத வலிமையுடனே. முந்தும்–முற்படுவான். எனில்–அப்படி முற்பட்டு வந்தானானால். அன்னவன் முடித்தலை முடித்து – அந்த ராவணனுடைய கிரீடம் அணிந்த தலைகளை முடித்து. சிந்தையுறு வெந்துயர் தவிர்த்து — சிந்தையில் பொருந்திய கொடுந்துயரைப் போக்கி.]

பொழிலின் அழிவு

அந்த முடித் தலைகளை முடித்தலும் அரிதன்று என்றே தோன்றுகிறது. இந்தப் பெரிய கோபாவேசத்திலே, – கணையாழி காட்டி வெற்றி கண்ட பெருங் குதூகலத்திலே. இத்தகைய மனநிலையிலே தான் அசோகவன அழிவு வேலை தொடங்குகிறது:

கள் வெறி போன்ற உத்ஸாக வெறியிலே மின் வெட்டுவது போலத் தோன்றிய ஆலோசனை தான். இந்த ஆலோசனை செயலாகும் போது, இந்தச் சோலை தான் என்ன பாடுபடுகிறது!

முடிந்தன, பிளந்தன
முரிந்தன, நெரிந்த,

மடிந்தன, பொடிந்தன,
மறிந்தன, முறிந்த,

இடிந்தன, தகர்ந்தன,
எரிந்தன, கரிந்த,

ஒடிந்தன, ஒசிந்தன,
உதிர்ந்தன, பிதிர்ந்த!

(முடிந்தன-வாழ்வு முடிந்து போயின. முரிந்தன — நிலை கெட்டு வளைந்து போயின. நெரிந்த–நெரிந்து போயின. மடிந்தன — தலை சாய்ந்து விழுந்தன. மறிந்தன – மடங்கி விழுந்தன. தகர்ந்தன – உடைந்து போயின. ஒசிந்தன – துவண்டு சாய்ந்தன. பிதிர்ந்த – சோற்றுப் பிண்டம் சிதறுவது போல் சிதைந்தன.)

'வாழ்க்கை முடிந்தது இதோ உங்களுக்கு!' என்று சொல்வது போல் முடிந்து விடுகிறனும், எத்தனையோ செடி கொடிகளையும் மரங்களையும். இப்படி முடிந்து போக இசையாத வயிரம் பாய்ந்த மரங்கள் பிளந்து போகின்றன.

வேறு சில மரங்களும் படர் கொடிகளும் நிலை கெட்டு வளைந்து கிடக்கின்றன. இன்னும் சில நெரிந்து போகின்றன.

இந்தச் சோலையின் 'வணங்காமுடி மன்னர்'களான எத்தனை மரங்கள் முடி சாய்ந்து மடிந்து விழுகின்றன. இடையே பொடிபட்டுக் கிடக்கும் செய் குன்றுகள் எத்தனை!

கீழ் மேலாகி விழுந்து கிடக்கும் தருக்கள் எத்தனை! மளமள வென்று முறிந்து விழும் கிளைகள் எத்தனை! அவற்றுக்கிடையே இடிபட்டுக் கிடக்கும் மாடங்கள் மண்டபங்கள் எத்தனை!

அதோ தகர்ந்து விழுகின்றன சுவர்களும் மதில்களும். இதோ ஒன்றோடொன்று நெருங்கி உரசி எரிகின்றன மரங்கள்! கரிந்து போகின்றன பச்சை மரங்களும் பசுஞ் சுடர்ப் பூங் கொடிகளும்!

ஒரு புறம் சட சடவென்று சரிந்து ஒடிகின்றன மரங்கள். ஒரு புறம் துவண்டு சாய்கின்றன பச்சைப் பசுங் கொடிகள். அங்கே நட்சத்திரங்கள் உதிர்வது போல் உதிர்கின்றன பன்னிறப் பூக்களும்; இங்கே பழவர்க்கங்கள் பிதிர்ந்து சிதைந்து கிடக்கின்றன!

இப்படியெல்லாம் அசோகவனம் சின்னாபின்னப்படும் காட்சியையும் சப்தஜாலங்களையும் எவ்வளவு தெளிவாகப் பார்க்கிறோம், கேட்கிறோம், இந்த ஒரே சிறு பாட்டிலே. பதினாறு வினைகளை அப்படியே அடுக்கி,

தனந்தன தனந்தன
தனந்தன தனந்த

என்ற சந்தக் குழிப்பிலே பாடியிருக்கும் இப்பாட்டைப் பாடப் பாட, அசோக வனத்திலே அநுமனது அந்தக் குதூகல கோர தாண்டவம் அப்படியே கண் வழியாகவும் காது வழியாகவும் வந்து காட்சியளிக்கிறது.



29. அசோகவன அழிவு

(வால்மீகியும் கம்பனும்)

இனி, ஆதிகாவியமாகிய ஸ்ரீ வால்மீகத்தைச் சற்று நோக்குவோம். முப்பத்தெட்டாவது ஸர்க்கத்திலே காகாசுர விருத்தாந்தத்தை விவரித்த பின் சீதை, 'எனக்காக ஒரு காகத்தின் மேல் பிரம்மாஸ்திரப் பிரயோகம் செய்தவர் இந்த அரக்கர்கோனின் உபத்திரவத்தைப் பொறுத்திருப்பதற்குக் காரணம் ஏதோ?' என்று கலங்கினாள்.

வால்மீகி கண்ட அனுமனும் சீதையும்

'பிறர் துயரத்தைச் சகிக்க மாட்டேன் என்றவர், அவரைச் சார்ந்த நான் படும் துயரத்தைத் தீர்க்க வில்லையே' என்று கவலைப்பட்டாள். பிறகு புருஷோத்தமனாகிய ராமபிரானின் புயவலிமை ஆயுத வலிமை முதலியவற்றை ஞாபகப்படுத்திக் கொண்டு, அத்தகைய வீரன் தன்னிடம் உண்மையான காதல் கொண்டிருந்தால் அரக்கர்களை இதற்குள்ளே நாசஞ் செய்திருக்க வேண்டுமே என்றாள். இடையே, லட்சுமண வலிமையும் வீரமும், சத்துருக்களுக்குக் காலனாகத் தோன்றும் தோற்றமும் நினைவிற்கு வந்தன.

'அவர்கள் உயிரைக் கொடுத்தாவது என்னைக் காப்பதற்கு நான் தகாதவளோ?' என்று கேட்டாள். தன்னிடத்தில் இன்னதென்று தான் அறியமுடியாத ஏதோ ஒரு பெரிய குற்றம் இருக்க வேண்டும் என்று கூடச் சொல்லிக் கண்ணீர் பெருகத் தீனமான குரலில் பிரலாபித்தாள்.

இந்த நிலையில் இவளைச் சமாதானப்படுத்துவதற்காக அனுமன் சத்தியத்தின் மேல் ஆணையிட்டுப் பேசினான். அவர்கள் அரக்கர் பேரூரை நீறாக்கப் போகிறார்கள் என்றான். அவர்கள் சீதையைத் தங்கள் நகரத்திற்கு அழைத்துப் போவது திண்ணம் என்றான்.

கடைசியாக, 'ராகவனுக்கும் லட்சுமணனுக்கும் சுக்கிரீவனுக்கும் மற்ற வானரர்களுக்கும் நான் சொல்ல வேண்டிய செய்தி என்ன?' என்று கேட்டான். இதற்கு விடையாகச் சீதை, ராம லட்சுமணரின் க்ஷேம விசாரணையைச் சற்று விரிவாகச் செய்துவிட்டு, ராமனிடம் அடிக்கடி சொல்லித் தன் துக்க நாசமாகிய காரியத்தை ராமன் வாயிலாக அனுமனே முடித்து வைக்க வேண்டும் என்ற பொறுப்பையும் இவன் மீது சுமத்துகிறாள்.

அப்பால் சீதை தன் ஆடையிலிருந்து சூடாமணியை எடுத்து ராமனுக்கு அடையாளமாகக் காட்டும்படி அனுமனிடம் கொடுத்தாள். சீதையைக் கண்ட மகிழ்ச்சியால், உடம்பு இலங்கையிலிருந்தபோதிலும் அநுமனுள்ளம் ராமனையே அடைந்து விட்டது! இப்படி ஆனந்த பரவசனாய்த் திரும்பிச் செல்ல எண்ணினான் என்று ரஸமாக முடிகிறது முப்பத்தெட்டாவது ஸர்க்கம்.

ஆனால் கம்ப ராமாயணத்தில் நாம் காண்பதுபோல் இப்படியே அசோக வன அழிவிற்கு வந்து விடாமல், வால்மீகத்திலே அனுமன் இரண்டு ஸர்க்கங்களில் சீதையைத் தேற்றி விடைபெற்றுக் கொண்டான். 'ஐயோ! இவன் போய்விட்டால் நமக்குக் கதி யார்? சோக சமுத்திரம் மறுபடியும் மூடிக் கொள்ளுமே!' என்று சீதை மறுபடியும் கலங்கி மறுபடியும் க்ஷேம விசாரணை செய்து, மறுபடியும் தன் க்ஷேமத்திற்கு அனுமனையே பொறுப்பாளி யாக்கினாள். அனுமனும் மறுபடியும் சீதையைத் தேற்றினான்.

இதற்குப் பின்பும் விடை கொடுக்கச் சீதைக்கு மனம் வரவில்லை. ஓரிடத்தில் மறைந்து இளைப்பாறிப் போகலாம் என்றாள். இப்படியே இந்தச் சம்பாஷணையை நீடிக்கச் செய்கிறார் ஸ்ரீ வால்மீக மாமுனிவர்.

இச் சம்பாஷணையினிடையே சீதை, தானும் ராமனும் ஒரு மலையிலிருக்கையில் தன் திலகம் அழிந்து போக ராமன் ஒரு வகைக் காவிப் பொடியால் விளையாட்டாகத் தன் நெற்றியில் திலகமிட்டதையும் அந்தரங்க அடையாளமாய்க் குறிப்பிட்டாள்.

அனுமன் தன் உடம்பை வளர்த்து வேகமாய்க் கிளம்பச் சித்தமாகி விட்ட பின்பும், சீதை 'நான் ராமனைப் போலப் பார்த்து வந்த சூடாமணியையும் கொடுத்து விட்டு, இவனையும் போக விட்டு எப்படிப் பிழைத்திருப்பேன்?' என்று முகம் வாடி உடல் சோர்ந்து கண்ணீர் பெருக்கினாள். இறுதியில் அனுமனை நோக்கி, 'உனக்குச் சகல மங்களங்களும் வெற்றியும் உண்டாகட்டும்' என்றாள்.

அனுமன், வந்த காரியம் முடிந்ததென்ற மகிழ்ச்சியுடன் திரும்பிப் போக முயலும்போது, செய்ய வேண்டிய காரியம் இன்னும் கொஞ்சம் பாக்கி யிருப்பதாகத் தோன்றியது. எனவே, வடக்கு நோக்கியவன் இந்த எண்ணத்துடன் தெற்கு நோக்கித் திரும்பினான்.

இப்படி இரண்டு ஸர்க்கங்கள் கழிந்ததும், 'அசோக வனத்தை அழித்தல்' வருணிக்கப் படுகிறது. 'எனக்கும் இங்குள்ள அரக்கர்களுக்கும் சுலபமாய்ப் போர் நேரக் கூடிய உபாயத்தைத் தேடவேண்டும்' என்று அனுமன் ஆலோசித்தான்.

அரக்கர்கோனையும் அமைச்சர்களையும் படைத்தலைவர்களையும் எதிர்க்க நேர்ந்தால் ராட்சஸ பலம் தெரிவதோடு ராவணனுடைய அபிப்பிராயத்தையும் நன்றாய் அறிந்து கொள்ளலாம் என்பது அனுமனுடைய துணிவு.



இந்தத் துணிவை உள்ளத்திற் கொண்டதும், பார்ப்பவர் கண்ணையும் மனத்தையும் கவரும் அசோக வனத்தை ஒரு பார்வை பார்த்தான் அனுமன். இதை அழிப்பதே உபாயம் என்று தீர்மானித்துப் பெரிய விருட்சங்களை முறிக்கத் தொடங்கினான்.

அசோகவன அழிவு சுருக்கமாகவே வால்மீகத்தில் வருணிக்கப் படுகிறது. பறவைகள் பயந்து கூச்சலிடுவதும், பூக்கள் பூங்கொடிகள் மண்டபங்கள் ஆகியவை நாசமடைவதும், மிருகங்கள் மடிவதும், தோட்டம் உருவழிந்து கிடப்பதும்,



அந்த நாசவேலைக்குப் பின் அனுமன் உத்ஸாகத்தால் ஜொலித்துக் கொண்டு தோட்டத்தின் வெளி வாசலில் அரக்கர் களின் வரவு நோக்கிக் காத்திருப்பதும். வசீகரமாகவே காண்கின்றன, இந்தச் சுருக்கமான வருணனையிலும்.

இந்தக் கதையை நம்மைப்போல் கம்பனும் அனுபவித்திருப்பான். ஏன், நம்மைக் காட்டிலும் அனுபவித்திருப் பான். எனினும் கம்பன் வால்மீகி-கதையை அப்படியே பாடி விடாமல் வேறொரு 'புதிய சிருஷ்டி' செய்து பார்க்கிறான்.

கம்பன் போக்கு

அழிவு-வேலையைக் கம்பன் வால்மீகியைக் காட்டிலும் அதிகமாகவே வருணிக்கிறான். வனம் அழியும் சம்பிரமத்தை நாம் சப்த ஜாலங்களிலேயே கண்டு கொள்கிறோம்.

இடையே சந்திராஸ்தமன வருணனையும் வருகிறது. எனினும் இந்தப் பகுதியைச் சிறந்த கம்ப சித்திரங்களில் ஒன்றாகக் கருத முடியாது.

இத்தகைய பாடல்களில் மிருக பட்சிகள் படும் பாடுகள் குறித்து வருணிக்கும் ஒரு பாட்டை இப்போது பார்த்துப் போகலாம். அந்தப் பரிதாபமான காட்சிகளை இக் கவிதைக் கண்ணாடி வாயிலாகக் கண்டு கொள்கிறோம்.

சோலையைத்தான் அழித்தான் அனுமன். மிருகங்களையோ பறவைகளையோ அழிக்க வில்லை. எனினும் பறவைகளும் மிருகங்களும் நிலை கலங்கி அவஸ்தைப் படுகின்றன; அழிந்து போகின்றன.

மிருகங்கள் கூச்சலிட்டுக் கண் கலங்கி உளம் கலங்கி அவஸ்தைப்பட, பறவைகளோ நடு நடுங்கிக் கடலிலே விழுந்து விடுகின்றனவாம். அப்படி விழாத பறவைகள் பதறிப் பதைத்து வானத்தில் பறக்க ஆரம்பித்துச் சிறிது தூரம் சிறகடித்து மேலே பறக்க முடியாமல் கீழே விழுந்து விடுகின்றன.

இப்படி விழுந்த பறவைகள் சிறகுகளை உதறுகின்றன; மீண்டும் அச் சிறகுகளை ஒடுக்கிக் கொள்கின்றன; அப்படியே பிராணனை விடுகின்றன.

வால்மீகத்திலே 'பறவைகள் பயந்து கூச்சலிட்டன' என்றும், 'மகா சர்ப்பங்களும் துஷ்ட மிருகங்களும் மடிந்தன' என்றும் மிகவும் சுருக்கமாக வருவது தான், எத்தகைய பயங்கரமான விவரங்



சருடன் தோன்றுகிறது கம்ப சித்திரத்திலே:

குதறின; வெருவி
உள்ளம் கலங்கின
விலங்கு. கன்கள்
குதறின பறவை;
வேலை குளித்தன;
குளித்தி லாத
பதறின, பதைத்த,
வானிற் பறந்தன,
பறந்து பார்விழ்ந்(து)
உதறின சிறையை,
மீள ஒடுக்கின,
உலந்து போன.

[வெருவி – அச்சம்கொண்டு. விலங்கு– (அந்த வனத்திலுள்ள) மிருகங்கள். குதறின – கலங்கிப் போயின. வேலை – கடல். குளித்திலாத-(இங்கே) விழுந்து முழுகிப் போகாத பறவைகள். பதறின பதைத்த – பதறிப் பதைத்து. பறந்தன – பறக்கத் தொடங்கி. பார்வீழ்ந்து – (சிறிது தூரம் பறந்த பின் மேலே பறக்க முடியாமல்) பூமியில் வீழ்ந்து. சிறை – சிறகு. மீள ஒடுக்கின – மீண்டும் (அச்சிறகுகளை) ஒடுக்கிக் கொண்டன. உலந்து போன – அழிந்து போயின.]

சீதாபிராட்டி தங்கி யிருந்த இடம் தான் அழியாமல் இருக்கிறது. அவள் அருகே யிருந்த மரமும் தனியாக நிற்கிறது. இந்த வனத்தை இப்படி அழித்து விட்ட அனுமனும் அந்தப் பாழான வெட்ட வெளியில் தனியனாக நிற்கிறான்.

மற்றை மரங்களெல்லாம் அழிய, சீதை தங்கி யிருந்த மரம் ஒன்று மாத்திரம் அழியாமலிருப்பதற்குப் புராண உலகிலே ஓர் உபமானம் தேடிக் கண்டு கொள்கிறான் கவிஞன்:

பொய்ம்முறை அரக்கர்
காக்கும் புள்ளுறை
புதுமென் சோலை
விம்முறும் உள்ளத்(து)
அன்னம் இருக்கும்அவ்
விருக்கம் ஒன்றும்,
மும்முறை உலகம்
எல்லாம் முற்றுற
முடிவ தான
அம்முறை ஐயன்
வைகும் ஆலென
நின்ற தன்றே!

[பொய்ம்முறை – 'பொய்யே எங்கள் வாழ்க்கை முறை' என்று ஒழுகிவரும். புள்உறை புதுமென் சோலை – பறவைகள் வசிக்கின்ற, என்றும் புதுமையாகப் பொலியும், மென்மையான சோலையில். விம்முறும் உள்ளத்து – வருந்திக்கொண்டிருக்கும் உள்ளத்தையுடைய. அன்னம் – அன்னம் போன்ற சீதாபிராட்டி. விருக்கம் – விருட்சம். மும்முறை உலகம் எல்லாம் – மூன்று வகைப்பட்ட உலகங்கள் முழுதும். முற்றுற முடிவதான – அழியும்படி முடிவு பெறுகின்ற. அம்முறை – அந்தக் காலத்திலே; அந்தப் பிரளய காலத்திலே. ஐயன் – மகாவிஷ்ணு. வைகும் – தங்குகின்ற. ஆல் என – ஆலமரம் போல. நின்றது–அழியாது நிற்பதாயிற்று.]

எல்லாம் அழியும் ஊழிக் காலத்திலே திருமால் பள்ளிகொள்ளுமாறு ஆல் மாத்திரம் நிற்பது புராணக் கதை. இக்கதையில் வரும் ஆலமரத்திற்குச் சீதாபிராட்டி தங்கி யிருக்கும் விருட்சத்தை உவமை கூறிய கவிஞன், அப்போது தனியே நிற்கும் அனுமனுக்கு உலகமெல்லாம் அளந்து நின்ற நெடுமாலை உவமை கூறுவதும் கவனிக்கத் தக்கது.

தாழிரும் பொழில்கள்
எல்லாம் துடைத்தொரு
தமியன் நின்றான்,
எழினோ டேழு
நாடும் அளந்தவன்
எனலும் ஆனான்.

[தாழ் இரும் பொழில்கள் எல்லாம் – தழைத்த பெரிய சோலை முழுவதையும். ஒரு தமியன் நின்றான்–தான் ஒரு தனியே நின்றவனாகிய அனுமன். ஏழினோடு ஏழு நாடும் – மேலேழு உலகங்களோடு கீழேழு உலகங்களையும்.]

அனுமனுடைய பேருருவத்திற்குத் திரிவிக்கிரம மூர்த்தியை உவமையாகக் கூறியவன், எல்லாவற்றையும் அழித்து நிற்கும் கோலத்திற்கு ருத்திரமூர்த்தியையும் உவமிக்கின்றான்.

இது நம் கவிஞன் கண்ட சமரசம், ஊழியின் இறுதிக் காலத்திலே திருமால் மாத்திரம் ஆலிலைமேல் பள்ளி கொண்டிருப்பதாக வைணவமும், சிவபெருமான் மாத்திரம் ஈறிலாதவனாக இருப்பதாய்ச் சைவமும் கூறுவது பிரசித்தமல்லவா?

சுந்தர ராமாயணம்

பி.ஸ்ரீ

30. புயல் ஓய்ந்ததா ?

அனுமன் தூதுதான் சுந்தர காண்டம். இதில் கம்பனுக்கும் வால்மீகிக்கும் கருத்து வேற்றுமை இல்லை. இந்த இரு பெருங் காவியங்களிலும் சொற்சுவை பொருட்சுவை நிரம்பிய கவிச்சித்திரங்கள் பல சுந்தர காண்டத்தின் 'சௌந்தரியச் சிறப்பு என்பதிலும் ஐயமில்லை.

எனினும், அனுமன் என்னும் பிரம்மசாரியப் பேரறிவு சீதை யென்னும் கற்புக் கனலைக் கண்டு, அரக்கர் கோனையும் கண்டு தூது சொல்லி மீண்ட இந்தப் பெருங் கதைப் பகுதியில், இரு பெருங் கவிகளும் தத்தம் மேதா விலாசங்களுக்கு இசைந்தவாறு புதுமைகளான காவிய சிருஷ்டிகள் செய்திருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. இதை மறக்கவும் முடியாது; மறைக்கவும் முடியாது.

காவிய அமைப்பு முறையிலும், கவிச் சிற்பத் திறனிலும், குண சித்திரங்களிலும், கட்டங்களைச் சுவைக் கலை புலப்படக் கவிச் சித்திரமாக உருவாக்கும் முறையிலும், இந்த இரண்டு இதிகாசங்களுக்கும் இடையே வேற்றுமை உண்டு. தத்துவ அடிப்படையிலும் உயிர்நிலையான சமய உணர்ச்சியிலும் கூடக் கம்ப சித்திரங்களுக்கும் வால்மீகி சித்திரங்களுக்கும் வேறுபாடு உண்டு என்று கருதுவதே சரியாகும்.

சுருங்கச் சொன்னால், காவிய உலகில் இரண்டு தனிப்பட்ட வழிகள் கம்பன் போன வழியும், வால்மீகி போன வழியும். இதை உணர்ந்து கொள்ளாதவர்கள் கம்பன் கவிதையை அனுபவிக்கும் ரஸானுபவத்தை இழந்து விடுவார்கள் என்றே சொல்லத் துணிகிறேன். வால்மீகத்தின் ரஸானுபவத்தையும் இழந்து விடுவார்கள் என்றும் தோன்றுகிறது.

இரு காவியங்களிலும் சுந்தர காண்டப் பகுதிகள்

வால்மீகியின் சுந்தர காண்டத்தை ரஸிகரான ஸ்ரீ தி. சுந்தராசாரியார் நான்கு பகுதிகளாகப் பிரித்து, 'தேடல்' 'காணல்' 'தேற்றல்' 'திறல் விளங்கல்' என்று பெயர்களும் கொடுத்திருக்கிறார்.

அனுமன் சீதையைத் தேடிக் கண்டு தேற்றுவதும், தன் திறமை விளங்க அசோக வனத்தை அழித்து அரக்கர் பேரூரில் எரியூட்டி அரக்கர் கோனுக்குப் புத்தி புகட்டித் தூது உரைத்து மீண்டு 'கண்டேன் சீதையை' என்று ராமனிடம் செய்தி சொல்வதும் தானே சுந்தரகாண்டத்தின் கதை?

கம்பனுடைய சுந்தர காண்டப் பகுதிகளிலும், 'ஊர்தேடு படலம்' 'கடல் தாவு படல'த்தை அடுத்து ஒரு முக்கியமான பகுதியாகவே அமைந்திருக்கிறது. கடல்தாவுதல் 'ஊர் தேடு'தலுக்கு ஒரு முன்னுரைதான். இரண்டாவது முக்கிய நிகழ்ச்சி 'காட்சி' தான். மூன்றாவது

பெரு நிகழ்ச்சி கணையாழி காட்டிச் சூளாமணி பெறுவது. இதுவே இதய ஸ்தானம். இதற்குள் அடங்கியுள்ள நிகழ்ச்சிதான் சீதையைத் தேற்றுவது. இதற்கு அடுத்த முக்கிய நிகழ்ச்சி அனுமன் தூதுரைக்க வழி தேடுவதும், தூதுரைப்பதும். முடிமணியாக அமைகின்றது இறுதிப் பகுதியான ஐந்தாவது பெரு நிகழ்ச்சி. ராமனைக் கண்டு செய்தி சொல்லி முடிப்பதுதான் இது.

அகத்திறனும் புறத்திறனும்

இதற்கு முந்திய பகுதியில்தான் இப்போது பிரவேசம் செய்திருக்கிறோம். வால்மீகத்தில் வரும் இப்பகுதியைக் குலசேகராழ்வாரைப் பின்பற்றித் 'திறல் விளங்கல்' என்னும் பெயரிட்டு விமரிசனம் செய்யும் திரு. சுந்தராசாரியார், அனுமனின் திறமையை அகத் திறன் என்றும், புறத்திறன் என்றும் பேசுவது பொருத்தமானதே.

பிரம்மசரியப் பேரறிவு தான் அனுமனது அகத்திறன். இதைத் தான் கம்பன்,

முயற்கறை மலராத்
திங்கள் முகத்தியர்
முதலி னோரை
மயக்கற நாடி
ஏகும் மாருதி

[முயல் கறை மலராத் திங்கள் முகத்தியர் — முயலென்று சாதாரணமாகச் சொல்லப்படுகின்ற களங்கம் விளங்காத பூர்ண சந்திரன் ஒன்று உண்டானால் அத்தகைய சந்திரபிம்பம் போன்ற முகத்தையுடைய பெண்கள். மயக்கு அற நாடி — அவர்களுடைய அழகிலே தான் சிறிதும் மயங்கி விடாமல் பிரம்மசரிய உள்ளத்துடன் நாடி. மாருதி — அனுமன்.]

என்ற வருணனையில் குறிப்பிடுகின்றான்.

இத்தகைய அகத்திறன் வாய்ந்தவன், தன் புறத்திறன் தோன்ற ராவணனைக் கண்டு தூது சொல்வதற்கு இன்றியமையாத அறிவு வேலைகளையும் செய்ய நேர்ந்தது என்ற கருத்தைக் கம்பராமாயணத்திலும் காண்கிறோம்; வால்மீகத்திலும் காண்கிறோம். சீதை தந்த சூடாமணியை விரலில் அணிந்து கொண்டதும் அனுமனுக்குப் புயவலிமை முன்னிலும் அதிகரித்ததாக ஒரு குறிப்புப் பொருளையும் காண்கிறார் 'சுந்தர காண்ட விமர்சன' ஆசிரியர்.

கம்பனோ இக் கருத்தைக் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ தெரிவிக்கவே யில்லை. சூடாமணியை அனுமன் தன் விரலில் அணிந்து கொண்டதாகவே கம்பன் சொல்லவில்லை. தன் ஆடையில் சுற்றி முடிந்து பத்திரப் படுத்திக் கொண்டதாகவே கூறுகிறான். வழியில் கீழே விழுந்து விடாதபடி முடிச்சு மேல் முடிச்சுப் போட்டுக் கொண்டதாகவும் ஒரு குறிப்பைக் காண்கிறோம், சூளாமணிப் படலத்தின் இந்த இறுதிப் பாட்டிலே.

சீதையின் சூளாமணியை விரலில் அணிந்து கொண்டு அழிவு—வேலைகளில் இறங்கியதாகக் கூறுவது கம்பனது பக்தியுள்ளத்திற்குப் பொருத்தமாகப் படவில்லை யென்றே தோன்றுகிறது. வால்மீகியின் கதைப் போக்கிலிருந்து மாறுபட்டு அந்த வேறுபாட்டை வற்புறுத்திக் காட்டுவது போலவும் அமைந்திருக்கிறது சூளாமணிப் படலத்தின் இறுதிச் செய்யுள்.

தென்றல் புயலாயிற்று !

கடல் தாவி ஊர் தேடிக் கண்டு தேற்றிக் கணையாழி காட்டிச் சூடாமணி பெற்றுச் சீதைக்கு உயிரைக் காப்பாற்றிக் கொடுத்த இவ்வளவு பெருங் காரியமும் ஒரு பெருந் தொழிலாகவே தோன்றவில்லையாம் அனுமனுக்கு; சிறு தொழிலாகவே தோன்றியதாம். இந்தச் சிறு தொழிலோடு திரும்புவது 'தீது' என்பது தானே கம்பன் கவிதையில் அனுமனுள்ளம்?

ஆகவே, வேறொரு செயலும் செய்ய வேண்டும் என்று எண்ணிய எண்ணத்தின் திண்மையில் தான், அந்தக் குதூகலப் பெரும்புயலில் தான், அசோக வனம் அழிந்தது. அரக்கர் பேரூரின் பேரழகுகளை வியந்த அனுமனுள்ளம், அசோக வனத்தின் அழகுகளைப் பாராட்டியதாகக் கம்பன் கூறவேயில்லை.

வால்மீகத்திலே, அசோகவனம் போன்ற லங்கையிலுள்ள நிகரற்ற நிர்மாணங்களைக் கண்டதும் அனுமனே அவற்றைச் சிறப்பித்துப் பேசியதாகச் சுந்தர காண்ட விமர்சகர் ஸ்ரீசுந்தராசாரியார் எடுத்துக் காட்டி யுள்ளார். கம்பராமாயணத்திலோ சீதைக்குச் சோகம் விளைத்த அசோக வனத்தை அசோகவனமாகவே அனுமன் பார்த்த

தாகவோ நினைத்ததாகவோ தோன்ற வில்லை. அதர்ம நிலையமாகிய ஒரு சிறைச்சாலையை இடித்தெறிவது போலவே ஒடித்துப் பொடித்து விடுகிறான், இந்தச் சிறைச் சோலையையும்.

இத்தகைய ஒரு குறிப்பினை வால்மீகத்திலும் விமர்சன ஆசிரியர், 'சீதைக்குச் சிறையாயிருந்து அத் தேவிக்குத் துன்பமிழைக்கும் அவற்றை (அசோகவனத்தையும் இலங்கையையும்) நினைக்க நினைக்க... அழித்துச் செல்வதே' தகுதி யென்று அனுமன் தீர்மானித்ததாகக் கூறுகிறார். சீதையைக் குளிர்வித்த தென்றல் 'புயல் காற்றாக மாறி' மரங்கள் முதலியவற்றை வேருடன் பறித்தெறிந்து அசோக வனத்தைச் சோகவனம் ஆக்கி விட்டதாக விமர்சன ரஸிகர் கூறியுள்ளது வால்மீகத்திற்குப் பொருந்துவது போல் கம்பனுக்கும் பொருந்துவது தான்.

அரக்கியர் நடுக்கம்

அசோகவனம் அழியும் போது ஏற்பட்ட கூச்சல்களும் ஊளைக் குரல்களும் அனுமனது அட்டகாசங்களும் உறங்கிக் கொண்டிருந்த அரக்கியரை எழுப்பி விடுகின்றன. இந்த அரக்கியரைத்தான் அனுமனது மந்திரவித்தையால் உறங்கினவர்கள்என்று கம்பன் ஏற்கெனவே கூறியுள்ளான்.

அரக்கியர் திடீரென்று விழித்துக் கொண்டதும் அனுமன் அவர்களைப் பயமுறுத்தக்கோரமான ஒருபேருருவம் எடுத்ததாகவும், அந்த வானர மகா பர்வதத்தைக் கண்டதும்அரக்கியர்சீதையைப் பார்த்து, 'இவன் யார்?எங்கே, எதற்காக வந்தான்? உன்னிடம் என்ன சொன்னான்?' என்றெல்லாம் கேட்டதாகவும் வால்மீகம் தெரிவிக்கிறது.



தாங்கள் பயந்து கொண்டே சீதையைப் பார்த்து, 'நீ பயப்படாமல் பதில் சொல்லு!' என்று அவர்கள் கூறுவதும் நகைச்சுவை தோன்ற அமைந்திருக்கிறது.

ஆனால் இதற்குச் சீதை கூறும் விடை வாசகர்களைப் பிரமிக்கச் செய்கிறது. சீதை சொல்லுகிறாள் · 'அரக்கர்களின் தந்திரங்களை என்னால் அறிய முடியுமோ? உங்களுக்கே நன்றாய்த் தெரியும். உங்களைப் போலவே நானும் பயந்து கொண்டிருக்கிறேன். இவனைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நினைத்த உருவம் எடுக்கத் தக்க அரக்

கன் வந்திருக்கிறுன் என்றே நினைக்கிறேன்.' இந்த வார்த்தையைக் கேட்ட அரக்கியர் நான்கு பக்கங்களிலும் ஓடி மறைந்தனர் என்பது வால்மீகி கதை. கம்பனும் வால்மீகியைப் பின்பற்றி, அனுமனைக் கண்டு பயந்த அரக்கியர் சீதையை வினவியதாகக் கூறுகிருன்:

இன்னன நிகழும்
வேலை, அரக்கியர்
எழுந்து பொங்கிப்

பொன்மலை யென்ன
நின்ற புனிதனைப்
புரிந்து நோக்கி,

'அன்னை;ஈ(து) என்ன
மேனி ? யார்கொல் ?'(என்று)
அச்ச முற்ருர்,

நன்னுதல் தன்னை
நோக்கி, 'அறிதியோ
நங்கை ?' என்ருர்.

[இன்னன நிகழும் வேலை—இந்த அழிவு வேலைகள் நடக்கும் போது. புரிந்து நோக்கி — உற்று நோக்கி. யார்கொல் — யாரோ. அச்சமுற்ருர் — அச்சம் கொண்டவர்களாய். நன்னுதல் தன்னை— அழகிய நெற்றியுள்ள சீதையை. அறிதியோ — அறிந்துள்ளாயோ. நங்கை — பெண்ணே.]



"நானும் குப்புவும் சேர்ந்து கச்சேரியில் பாடுகிறதாக இருந்தது....அது உருப்படாது என்று நான் ஒதுங்கிக் கொண்டு விட்டேன்!"

"அப்புறமாவது கச்சேரி உருப்பட்டதா?"

இந்தக் கேள்விக்குச் சீதை கூறும் விடையும் வால்மீகியின் கருத்தைத் தழுவியதாகவே இருக்கிறது. 'தீயவர்களான அரக்கர்கள் செய்யும் தீய மாயச் செயல்களை உங்களைப் போன்ற தீயவரே தெரிந்து கொள்ளலாம்; என்னைப் போன்ற தூயவர்கள் நிச்சயமாகத் தெரிந்து கொள்ள முடியுமோ?' என்று தான் சொல்லுகிருள் :

தீயவர் தீய
செய்தல் தீயவர்
தெரியின் அல்லால்,

தூயவர் துணிதல்
உண்டோ நும்முடைச்
சூழல் எல்லாம் ?

ஆயமான் எய்த
அம்மான் இளையவன்
அரக்கன் செய்த

மாயம் என்(று) உரைக்க —
வேயும் மெய்யென
மையல் கொண்டேன்.

[தெரியின் அல்லால் — தெரிந்து கொண்டால் கொள்ளலாமே யல்லாமல். தூயவர் — (இங்கே) என்னைப் போன்ற நல்லவர்கள். துணிதல் உண்டோ — நிச்சயமாய்த் தெரிந்து கொள்ளக் கூடுமோ. ஆயமான் எய்த — அரக்கனுகிய மான் வடிவம் கொண்டவன் வர. உரைக்கவேயும் — சொல்லச் செய்தேயும்.]

அனுமன் இன்னுனென்று தனக்குத் தெரியாது என்பதும், அவன் ஓர் அரக்கனுகவே இருக்கக்கூடும் என்பதும், வால்மீகத்தில் சீதை சொல்லுகிறபடியே, ஏறக்குறைய அதன் மொழி பெயர்ப்பாகவே இங்கும் காணப்படுகின்றன.

* * *

ஆனல் இது பொய்யல்லவா ? சீதா பிராட்டியே சொன்னுலும் பொய் பொய் தானே? இந்தப் பிரசினை பண்டித உலகில் ஒரு பெரும் புயலை உண்டாக்கி விட்டது. அந்தப் புயல் இன்னும் ஓய்ந்த பாடில்லை.